
ந. மயூரரூபன்

# மரத்தில் தொங்கும் பாம்பு

சிறுகதைகள்



# மரத்தில் தொங்கும் பாம்பு

சிறுகதைகள்

ந.மயூரரூபன்

மரத்தில் தொங்கும் பாம்பு (சிறுகதைத்தொகுப்பு)/ ந. மயூரரூபன்/ முதற்பதிப்பு: பங்குனி 2016/ © ஜெயலக்ஷ்மி/ அட்டைப்பட வடிவமைப்பு: ந.மயூரரூபன்/ அட்டை ஓவியம்: எஸ்.பி. புஸ்பகாந்தன்/ வெளியீடு: எழு கலை இலக்கியப்பேரவை/ பக்கம்:88/ விலை: 200.00/ அச்சு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Marathil Thonkum Pampu (Short Stories) / N. Majuraroopan/ First Edition: March 2016/© Jeyaluckshmy/ Cover Designed by N.Majuraroopan/ Cover Art by S.P. Pushpakanthan/ Published by EZHU Kalai Ilakiya Peravai/ Pages: 88 /Price: 200.00/ Printed by Baranee Printers, Nelliady

ISBN: 978-955-3932-00-6

யுத்தத்தால் இறந்தும் தொலைந்தும் போன
மக்களுக்கு

நன்றி

சரிநிகர்

ஈழநாதம்

வெளிச்சம்

யுகமாயினி

எழு சிறுகதைகள்

பசியடங்கா இருளில் இருந்து ஒன்பது கதைகள்

தவிர

காலநதியின் கற்குழிவு

உதயன்

சுடர்ஒளி

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்

கை.சரவணன்

பு. சத்தியமூர்த்தி

ஆவரங்கால் சுதன்

எஸ்.பி.புஷ்பகாந்தன்

த.அஜந்தகுமார்

க.பரணீதரன்

# முன்னுரை

நீ அதைப்பிடி. அவன் இதைப் பிடிக்கட்டும் எனப் பங்குபோட்டு பலர் சேர்ந்து சுமை காவிய ஒரு சூழலில் ந.மயூரரூபன் எனக்கு அறிமுகமானார். இது சுமார் 16, 17 வருடங்களுக்கு முந்திய நினைப்பு.

வாழ்வு என்பது தீப்பந்துடன் விளையாடுவது போன்ற புறச்சூழல் இருந்தாலும், ஆரோக்கியமான இலக்கிய முயற்சிகளும், நல்ல இலக்கியப் பகிர்வுகளுமாக செயல்திறன் மிக்கவர்களாக, சமூக சிந்தனையும் பிறர் நலன் பேணும் குணாம்சமும் கொண்டவார்களாக அனேகமானோர் இணைந்திருந்த காலம்.

ஈழநாடு மாதமலர் முதலாவது ஆண்டு நிறைவு விழா மலரில் - அதுவரை எழுதிய படைப்பாளிகளின் பட்டியல் ஒன்றினைச் சேர்ப்போம் எனப் பட்டியல் இட்டபோது அது நூறு பேரைத் தாண்டியது அதில் எண்பதுக்கு மேற்பட்டவர்கள் புதிய படைப்பாளிகள் என்பது நினைவுக்கு சுகம் தரும் விடயமாகும்.

அந்த எண்பது பெயர்களில் மயூரரூபனும்

ஒருவர். இப்போது உள்ள பல படைப்பாளிகள் அந்தப் பட்டியலில் இருந்தவர்கள் தான்.

இதை ஏன் இங்கு நான் குறிப்பிட முனைகின்றேன் என்றால் அதற்கு ஒரு காரணம் உண்டு. எந்த ஒரு தனிமனிதனாக இருந்தால் என்ன, அவன் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டால் என்ன? அல்லது அவன் கலை இலக்கியப் படைப்பாளியாக இருந்தால் என்ன? அவன் எத்தகைய சூழலில் எந்தப் பின்புலத்தில் வளர்த் தெடுக்கப்படுகின்றானோ, அந்த அனுபவம், அந்த அனுபவம் வாயிலாக பெறப்படும் படிப்பினைகள் என்பன அவனை வழிப்படுத்த வும், செயற்படுத்தவும் துணை நிற்கும். எனினும் இதற்கு சில புறநடைகளும் உண்டு.

எனினும் மயூரரூபன் போன்ற படைப்பாளிகளின் மூலம் அல்லது அவர்களது உந்துதல் விசையானது எந்தத் தளத்தில் இருந்து புறப்பட்டு எத்திசை நோக்கி செயற்படும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தனை வருடங்களுக்குப் பின்னரும் தான் எந்தத் தடத்தில், எந்த வேகத்தில், எந்தச் சிந்தனையுடன் செயற்பட ஆரம்பித்தாரோ அதற்குரிய ஆர்முடுகலுடன் அவர் செயற்படுவதும், இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதும் நிறைவைத் தரும் ஒரு விடயமாகும்.

இவ்வளவு காலத்திற்குப் பின்னர் கல்வியிலும், ஏனைய நிலைகளிலும் தன்னை நிலைநிறுத்தி, தன் இலக்கிய முயற்சிகளை எத்தகைய மாயமான்களிடமும் காவு கொடுக்காமல் தனித்துவமாக செயற்படுவதிலிருந்து இதனை நாங்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

மயூரரூபனின் “மரத்தில் தொங்கும் பாம்பு” என்னும் சிறுகதைத் தொகுப்பில் பன்னிரண்டு சிறுகதைகள் உள்ளன. இச்சிறுகதைகள் எல்லாவற்றிலும் நான் மேலே குறிப்பிட்ட விடயங்களே மையக் கருக்களாக உள்ளதை கவனிக்க முடியும்.

மயூரரூபன் கதைகள் - இந்த மண்ணில் உண்மையாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் பற்றியதானது. அந்த மக்கள் தம் வாழ்வின் வனப்புக்களை இழந்து சொந்த மண்ணை இழந்து, உறவுகளை இழந்து, உரிமைகளை இழந்து இன்று வரை எந்த விதமான தீர்வும் கிடைக்காத அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தொடர்பானது.

அடிப்படையிலேயே பின்தங்கிய மக்கள் தம்மீது திணிக்கப் பட்ட யுத்தம் காரணமாக சகலதையும் இழந்து இன்றுவரை சொந்த இடங்களில் (மீள) குடியமர்ந்து சொந்தத் தொழிலைச் செய்ய முடியாமல் சிறைக்கூடங்களிலும், அகதி முகங்களிலும் அடுத்தவர் வீடுகளிலும் இரண்டு தலைமுறைகளைக் கடந்து வாழ்ந்து வருகின்றனர்.

வீதிகள் பல கார்பெட்டுக்களாகி விட்டன. அந்தத் தெருக் களின் கரைகளில் மாடிக்கட்டடங்கள் வந்து விட்டன. தேர்தல் இப்போது தான் முடிந்தாலும் அடுத்த தேர்தலை நினைத்து இப்போதே சகபாடிகளுக்கு குழி பறிக்கும் வேலைகளை தொடர்ந்து செய்து பதவிகளே எங்களுக்கு முக்கியம் என்கிற அரசியல் தலைமைகளையும் வைத்துக் கொண்டு எங்கள் மக்கள் எப்போது விடிவு வரும் எனக் காத்திருக்க முடியும்.

விடிவு என்ன அமெரிக்காவில் இருந்து விமானத்திலும், இந்தியாவில் இருந்து வள்ளத்திலுமா வரப் போகிறது?

பாவப்பட்ட மக்களை பசியாற எப்போதும் செல்லும் பக்கம் இருக்கும் கூட்டம் ஒன்று சுற்றிக் கொண்டு தான் இருக்கிறது. ஏமாறுவதும், இரந்து பிழைப்பதும் வாடிக்கையாகிவிட்ட ஏழை எளிய மக்களினதும் எதிரிகளினதும் நல்ல வாழ்வுக்கு யார் பொறுப்பு.

இத்தகைய மக்களின் நிலையை தன் படைப்புக்களின் ஊடாக வெளிக் கொண்டு வரும் மயூரரூபன் தன் கடமையை சரிவரவே செய்துள்ளார் என்பது மெய்மையானதாகும்.

அவரது "நீயுருட்டும் சொற்கள்" கவிதைத் தொகுப்

பாகட்டும், அல்லது இந்தச் சிறுகதைத் தொகுப்பாகட்டும் அவர் எந்தத் தளத்தில் எந்த உணர்திறனுடன் உள்ளார் என்பதை எங்களுக்கு உணர்த்துகின்றன.

கலை இலக்கியமானது எங்கள் வாழ்க்கையோடு இணைந் துள்ளது. வாழ்க்கையின் எந்தப்பகுதியை எடுத்துக் கொண்டாலும், வாழ்க்கைக்குத் தேவையான எந்த அம்சமாக இருந்தாலும் கலை இலக்கியமானது அதனுடனே தொடர்பு கொண்டுள்ளது.

கலைப்படைப்பானது எங்களது எண்ணற்ற எல்லா வகையான அனுபவங்களை வெளிக் கொண்டு வருகின்றது.

ஏதோ விதத்தில் பட்டுணர்ந்த, பார்த்துணர்ந்த அனுபவங் கள் படைக்கப்படும்போது அது எங்கள் வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு அம்சமாகின்றது. படைப்பாளியின் அனுபவத்தை வாசிப்போர் பெறும் பொழுது கிளர்ந்தெழும் அவர்களது உணர்வு நிலையே மிகமுக்கியமானது.

குறைந்தபட்சம் அதனை வாசிப்போர் எந்த விதத்திலாவது அதனால் பாதிக்கப்பட வேண்டும். அல்லது அவர்களது சிந்தனையை முழுவீச்சுடன் செயற்படுத்தக் கூடியதாக மாற வேண்டும்.

"நம்மை விடவும் நாம் அதிகம் நேசிக்கின்ற ஒருவரின் மரணத்தைப் போலவோ, தற்கொலையைப் போலவோ ஆழ்ந்த துயரம் விளைவிக்கக்கூடிய புத்தகங்களே நமக்குத் தேவை. நமக்குள் படிந்திருக்கும் உறைபனிப்பாறையைப் பனிக் கோடரியால் பிளப்பதாக ஒரு புத்தகம் இருக்க வேண்டும்" என்பார் மேலைத்தேய அறிஞர் ஒருவர். அனுபவங்களைப் படைப்பாக்கும் படைப்பாளி தன் அனுபவங்கள் ஊடாக தான் வாழ்ந்த காலம், இடம், சூழல், அக்காலத்தைய நம்பிக்கைகள், பிழைகள், சரிகள் போன்றவற்றை ஏதோ விதத்தில் கொண்டு வந்து விடுகின்றான்.

அத்தகைய அனுபவங்களை அந்தச் சூழலில் சீவித்த எல்லோரும் கொண்டிருந்த போதும் நல்ல படைப்பாளியின்

படைப்பாற்றல் மூலம் அந்த அனுபவங்கள் புதிய உணர்நிலையைக் கொண்டு வரத்தூண்டுவதுடன் புதிய அர்த்தங்களையும், புதிய சிந்தனையையும் தூண்ட முற்படும்.

தனது அனுபவங்களால் படைப்பாக்கும் மயூரரூபன் தான் கண்ட கேட்ட விடயங்களுக்கு அப்பால் தான் வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கும் சூழலின் இயல்பு நிலையை படைப்புக்கள் ஊடாக கொண்டு வருகின்றார்.

"தேங்காய்ச்சொட்டு" கதையில் யாழ்ப்பாணத்து அந்தக் கிராமச் சூழல் கொண்டு வரப் படுவதில் இருந்து ஆரம்பமாகும் பயணம் "தேவியின் ஆசைகளும் அதற்கான மொழி பெயர்ப்பும்" கதைமூலம் வாசகர் உணர்திறனை வேறொரு தளத்திற்கு கொண்டு செல்கிறது.

"பெத்தாச்சி" கதையில் பெத்தாச்சி உலாவித்திரிந்த இடங் களின் உயிர் நிலையும், உயிர் அறுந்த நிலையையும் அச்சூழலை அறிந்த வாசகர் மட்டுமல்ல ஏனையவர்களும் உணர்ந்து கொளவர்.

தாய் இல்லை, தங்கை இல்லை, தகப்பன் தடுப்பில் அவனுக்கும் பொய்க்கால் - அப்படிப்பட்டதான ஒரு சூழலை "ஒருவானம்" கதை பேசுகிறது. இயற்கைச் சிறப்புகள் ஊடாக அந்த சிறுவனின் உணர்வு வெளிப்படுத்தப்படுகின்றது.

"பூக்குஞ்சு" சிறுகதை சமகால அவலத்தைப் பேசுகிறது. கதையின் தலைப்பே அந்தச் சிறு பெண்ணின் தோற்றத்தை வெளிப்படுத்தி அந்தக் கொடூரத்தின் உயர் கொதிநிலையைக் காட்டுகின்றது.

தொகுப்பில் உள்ள சிறுகதைகளில் "வெளிக்கிட்டிட்டன்", "பூனை" ஆகிய இரண்டு சிறுகதைகளும் சமகாலத்தின் இன்னு மொரு அவலத்தை வெளிப்படுத்துகின்றது.

உடல் இயங்காத முதிர்நிலையை எப்படிக் கடப்பது என்பது இப்போது சகல முதியோருக்கும் ஏற்படும் அச்சமாகிவிட்டது. ஆங்காங்கே நடக்கும் சம்பவங்கள் முதியோரின் இந்த அவல

நிலையை வெளிப்படுத்துகின்றன. அத்தகைய சம்பவங்களுக்கு ஒத்ததாக மேற்குறித்த இரண்டு கதைகளும் அமைந்துள்ளன.

நல்ல சிறுகதைகளில் வாழ்க்கை பற்றிய விமர்சனம் வெளிப்படுத்தப்படும். சமூகத்தின் அவலநிலை, பொருண்மிய பிரச்சினைகள், ஏனைய நெருக்கடிகள் எல்லாமே தயவு தாட்சணியம் இன்றி கேள்விக்குட்படுத்தப்படும். அதனால்தான் நல்ல சிறு கதையை ஒரு சமூக விமர்சனம் சார்ந்ததாக சொல்கிறார்கள்.

நல்ல சிறுகதைக்கு சிறப்பான மொழிநடைவேண்டும். இந்த மொழி நடையே படைப்பாளிக்கு தனித்தன்மையைக் கொடுக்கும். அதுவே அவனது படைப்பாக்கத்தின் சொந்த மொழிநடையாகும்.

எல்லோரும் தமிழில் எழுதினாலும் ஒவ்வொரு படைப் பாளிக்கும் உள்ள மொழிநடையானது ஒவ்வொரு விதமானது. தேர்ந்த வாசகன் அந்தப் படைப்பு மொழியின் ஊடாக படைப் பாளியை இனம் காண முடியும்.

படைப்பாளியின் தனித்துவம் மிக்க இந்த மொழி ஆளுமை இயல்பாகவே படைப்பாளிக்கு இருந்தாலும் அவனது ஏனைய பன்முகப்படுத்தப்பட்ட ஆளுமைகளாலும் அவனது மொழி அறிவும் வளர்ச்சி பெற்று அவன் தனித்தன்மை பெறுகின்றான்.

அந்த மொழி ஊடாகவே அவன் தன் சிறுகதையின் உணர் திறனை வாசகர்களின் நெஞ்சங்கள் ஊடாக உணர்த்துகின்றான்.

அந்த லயிப்பின் ஊடாகவே நல்ல வாசகன் அவ்வகையான படைப்பாளியின் படைப்புக்களைத் தேடி வாசிப்பதும், பிரமிப்பதும் நடக்கின்றது.

எனினும் கவிதைகளில் இருண்மை வந்து சிக்குவது போல சிறுகதைகளில் இவை வந்து சிக்கி விடுகின்றன. சிறிதும் புக முடியாத இறுக்கமான மொழி நடை வாசகர்களை கிளித்தட்டு ஆட வைத்து விடுகின்றது.

இவ்வாறான இறுக்கமான மொழிநடை படைப்பாளி மனித மனங்களின் அக உணர்வுகளை சித்திரிக்கும் போதும் அந்தரங்

கத்தில் பதுக்கி இருக்கும் அதீதமான உணர்வுகளை வெளிக் கொண்டு வரும் போதும் கறுப்பு மையினை பூசியது போல மொழி இறுகி விடுகின்றது. அத்தகைய படைப்புக்களை வருத்தப்பட்டு வலிசுமக்கும் மனத்துடன் மூன்று நான்கு தடவை வாசித்து விளங்கிக் கொள்ள முன்வருவோர் மிகக் குறைவு. அத்தகைய அவசியம் எல்லா வாசகர்களுக்கும் ஏற்படாது. அவ்வகையான சிறுகதை களுக்கு விமர்சனம் எழுத வேண்டுமானால் பல தடவை வாசித்து புரிந்து கொள்ள முனையலாம்.

மயூரரூபனின் "பசியடங்கா இருள்", "மரக்கட்டைகள்", "மரத்தில் தொங்கும் பாம்பு", "என்னைப் பற்றிய பிற்குறிப்பு"? "அணங்கு" போன்ற கதைகள் இவ்வாறான இறுக்கமான மொழி நடையில் நெய்யப்பட்டுள்ளன.

யுத்த காலத்து புறச்சூழலில் சொந்தமான கருத்துக்களை வெளியிட முடியாது சகல வேதனைகளுடனும் கஷ்டங்களுடனும் வாழ்ந்த வேளையில் இருந்த மன அந்தரிப்புக்களை, அவை தரும் வலிகளை, யுத்த காலத்து கடத்தல்கள், ஆட்களைப் பிடிப்பது யாருக்காகவோ யாரையாவது கைது செய்வது, சித்திரவதை செய்வது, இரத்தம் வழிந்தோட கொன்று, மண்ணில் புதைப்பது என்று சகல வன்கொடுமைகள் பற்றியும் மேற்குறித்த கதைகள் பேசுகின்றன.

எனினும் மேற்குறித்த சகல பிரச்சினைகளாலும் மனித மனங்களில் ஏற்படுத்தப்படும் ஆழ்மனத்து வேதனைகள், அந்த இருண்ட பக்கங்களின் உணர்வெழுச்சிகளின் ஏக்கங்கள் என்பன வெளிச்சொல்ல முடியாத உணர்வுகளில் அடக்கப்படுவதால் அவை படைப்பாக்கப்படும்போது எழுத்துகளால் இறுக்கப்படுகின்றன.

அதனால்த்தான் மேற்குறித்த சிறுகதைகளில் இறுக்கமான மொழிநடை பேணப்படுகின்றது. கதைகளை பூடகமாக சொல்லு வதற்கு முற்படும் போது மொழிநடையில் காட்டப்படும் இவ்வாறான இறுக்கம் வாசகர்களை சற்று சிரமப்பட வைக்கும் என்பதை

கவனிக்க வேண்டும். என்றாலும்கூட மயூரரூபன் தான் எதுவரை சொல்ல வேண்டும் என்ற ஒரு எல்லை வகுத்துக் கொண்டே செயற்படுகின்றார். அந்த வகையில் அவர் போற்றுதற்குரியவர்.

இல்லாவிடின் மன அவசங்களை எழுதுவதாக வெளிக்கிட்டு ஆழ்மனத்து உணர்வுகளையும் மனவக்கிரங்களையும் படைப் பாக்கும் சூழல் தற்போது விரிவாக்கம் பெற்றுள்ளது.

அட நாசமாய் போவாரே இப்படியெல்லாம் எழுதத்தான் வேண்டுமா? எனத் தலையைப் பிய்த்துக் கொள்ளும் வகையில் அதிர்ச்சியான முறையில் படைப்பாளிகளால் எழுதப்படுகின்றன.

தண்ணி அடிப்பது, கஞ்சா பாவிப்பது, தனிக் கூத்தியாளை தேடிப் போவது, ஒரே நேரத்தில் இரண்டு மூன்று கூத்தியாளுடன் ஒரு ஆண்மகன் போவது, அடுத்தவன் பெண்டாட்டியை அருட்டிப் பார்ப்பது என்ற மாதிரியான வில்லங்கமான விடயங்கள், அனுபவப் பகிர்வுகளாக படைப்புக்களாக வெளிப்படுத்தப்படுகின்றன.

பாலியல் விடயங்கள் எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் பச்சை இறைச்சியாக எழுதுவது நவீன இலக்கியத்தின் மூலாதாரம் என்ற மாதிரியாகி விட்டது. இதனைப் பிழையாக பார்ப்பவர்களை, கதைப்பவர்களை, விநோத ஜந்துக்களாக மேற்குறித்த விடயங்களைப் படைப்பாக்கும் படைப்பாளிகள் குறிப்பிடுவதுமாக மாறிவிட்ட சூழலினை நாங்கள் மனத்தில் கொள்வோமாக.

**இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**

**அம்பலவாணர் வீதி**

**உடுவில் கிழக்கு, சுன்னாகம்**

# பாம்பின் காலம் ஒன்று

தேவியின் ஆசைகளும் அதற்கான மொழிபெயர்ப்பும்/17
தேங்காய்ச் சொட்டு/23
பசியடங்கா இருள்/28
பெத்தாச்சி/35

# தேவியின் ஆசைகளும் அதற்கான மொழிபெயர்ப்பும்

சடாரென்று எழுந்து உட்கார்ந்தேன். நான் விழித்துப் பார்ப்பது என் விழிகளுக்கே அந்நியமாய் இருப்பது போல் ஒரு கூச்சம் இமைகளில் ஒட்டிக் கொண்டது. நானாகவே எழுந்தேனா?

எனக்குள் எழுந்த வினாவில், என் உணர்வுகளுக்கு உடன்பாடில்லை என்பதை என்னால் அறிய முடிந்தது. இதனை மிக நீண்ட தூக்கமாய் நான் கருதவில்லை. ஏனெனில், நூற்றுக்கணக்கான ஆண்டு களாய் தூங்கிய எனக்கு இடைக்கிடை ஏற்படும் இவ்வாறான விழிப்புகள் நுளம்புக் கடியின் சிறிய சிறிய அருட்டல்களாகவே தோன்றுகின்றன.

எனினும், பதினாறு அல்லது பதி னேழு மாதங்களில் ஏற்பட்ட திடீர் விழிப்புத் தான் இது.

நானாக அருண்டிருக்க மாட்டேன். அருட்டியவர்களைத் தேடிச் சலிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் எனக்கு இல்லை. என்

வாரிசுகள் பற்றி எனக்கு நன்கு தெரியும். இப்போது தூக்கத்தின் கனதி என்னை விட்டு இறங்கிவிட்டது. இமைக்கூச்சத்தை உதறியெறிந்து விழிப்பார்வை களை விரியவிட்டேன்.

சிறைக்கூடம்தான்.

வெளியேயிருந்து பார்ப்பவர்களுக்கான அற்புதச் சிறைக் கூடம். உள்ளிருந்து எனது உணர்வுகளையும் ஆசைகளையும் வழமை போல் வளர்த்துக்கொள்ள வசதிகளனைத்தும் உள்ளே வகையிட்டு இருந்தன.

என் நூற்றாண்டு ஆசைகளின் எச்சங்களும், அதுபற்றிய கனவுகளும் செல்லரிக்காது பேண அழகிய பெட்டகமொன்று எனக்கருகே இருந்தது.

எழுந்தேன்.

யானைகள் அணி வகுத்து நின்றன.

படை வீரர்கள் கவசம் பூண்டு, ஆயுதம் தாங்கி, என் வார்த்தை களை எதிர்பார்த்து காதுகளில் உயிர்ப்பினை நிறைத்திருந்தனர்.

மஞ்சளுடை போர்த்திய,

புரவிகளின் வழி திறக்கும் எங்கள் மதிப்பிற்குரிய குரு ஆசி கொடுத்து ஒதுங்க நான் நீண்ட வாளுடன் அம்பாரி மேல் ஏறி அமர்ந்தேன்.

வாயிலிருந்து வார்த்தை பிறந்தது.

மண்ணிலிருந்து புழுதி பறந்தது.

வாளிலிருந்து இரத்தம் சொட்டியது.

ஒவ்வொரு தடவையும் எனது துயில் நீங்கலில் இந்த நினைவுகள்தான் – (கனவுகள் என்று நீங்கள் சொல்வீர்கள் ஆனால் என்னால் அவ்வாறு சொல்ல முடியவில்லை) குளிப்பாட்டுவனவாய் இருந்தன.

இன்றும் மாற்றமேதுமின்றி அப்படியே இருக்கின்றன.

புத்துணர்ச்சி புகுந்து கொண்டதாய் உணர்வுகள் எனக்கு ஞாபகப்படுத்தின.

பெட்டகத்தை நெருங்கினேன்.

ஆசைகளின் சேமிப்பு; எனது பொக்கிசம்.

பெட்டகத்தினை மிகுந்த அன்புடன் தடவினேன். நானென்று என்னை அடையாளப்படுத்துவதே இந்தப் பெட்டகந் தானே. என் மகனின் தலையினைத் தடவுவதாயும் எனக்குள் நினைப்பு ஓடியது. ஒருவித ஆவல் நிறைந்த வேகத்துடன் யன்னலை நோக்கிப் பாய்ந்தேன்.

கால்களில் பூக்கள் மிதிபட்டன.

அப்போதுதான் பார்த்தேன். எனது கட்டிலின் பகுதிகளில் வாடாத அற்புத மலர்கள் - அருமையான அல்லி மலர்கள் தரையிலும் பரவியிருந்தன.

ஊதுபத்தியின் வாசனையை இப்போது நன்றாக எனது நாசிகள் நுகர்ந்து கொண்டன.

எனக்குள் மகிழ்ச்சி பீறிட்டெழுந்தது.

கரைபுரண்ட சந்தோச வேக்காட்டுடன் சத்தமிட்டுச் சிரித்தேன்.

எனது விம்மும் இதயம், இச்சேதியை யாருக்காவது சொல்ல வேண்டுமெனத் துடித்தது. எனது துரதிஷ்டம், என்னருகே யாருமே இல்லை.

மன்னர், விகாரமாதேவியின் இந்நிலையைப் பார்க்க நேரிட்டிருந்தால்...

"ஹஹ்ஹஹ்ஹா....."

அவருடைய முகத்தின் கோணலைக் கற்பனையில் ரசிக்க நன்றாய்த்தான் இருக்கிறது.

சிரித்தபடியே பெருமிதமாய் எனது பெட்டகத்தின் மீது விழிகளால் தடவினேன்.

எனது மகிழ்ச்சி அக்கணத்தில் திடீரென என்னைவிட்டு ஓடியது. எனது உற்சாகத்தின் முதுகெலும்பை யாரோ உருவி எறிந்து விட்டார்கள்.

யாரோ? – அது எனது வாரிசுகளேதான்.

பெட்டகத்தினை மீண்டும் நெருங்கினேன்.

முதலில் நான் இதனைக் காணவில்லையே...

கவனிக்கத் தவறிவிட்டேன்.

பெட்டகத்திற்கு அல்லி மலர்களால் மாலை போடப் பட்டிருந்தது. அது ஆயிரம் மலர்களாகவே இருக்க வேண்டும். அருகே பெரிய சாடியொன்றில் தேன் நிறைந்திருந்தது.

எனது ஆசைகளுக்காய் இன்றும் அவற்றினை நிறைவேற்றி இருக்கிறார்கள். மூன்றாவது ஆசையான தமிழ்த் தளபதியின் தலையையும் அர்ப்பணித்திருப்பார்கள்.

மகிழ்ச்சிதான். எனினும், எனக்கான மரியாதை எனது ஆசைகள் பொதிந்த பெட்டகத்திற்கானதேயென்ற உண்மைதான் என்னை நிலைகுலைய வைக்கிறது.

பெட்டகத்தின் முன்னே தட்டுகளில் பழங்கள் படைக்கப் பட்டிருந்தன.

கொழுத்தப்பட்ட ஊதுபத்திகளின் வாசனை அங்கு காவல் வளையத்தினை ஏற்படுத்தியிருந்தது.

எனக்கு நன்றாகவே புரிந்தது.

பெட்டகத்தின் உடைமைக்குச் சொந்தக்காரி என்பதால் எச்சமலங்கள் ஒரு சில, எனக்காக.

இது வழமைதான்.

எனது தூக்கத்தின் பின்னான ஒரு சடங்கு,

எனினும் ஒவ்வொரு தடவையும் நான் புதியவளாகவே உணர்ந்து கொள்கிறேன்.

பெட்டகத்தினடியில் தளர்ந்தமர்ந்து, சிறிது நேரம் மோன நிலைப்பட்டவளாயானேன்.

ஏதோவொரு திடுக்கிடலில் என் நிலைகலைந்து எழுந்து பெட்டகத்தினைத் திறந்தேன். திறக்கும் நொடிகள் ஒவ்வொன்றிலும் இனம் புரியாத ஓர் உணர்வு என்னைச் சூழ்ந்து கொள்கிறது.

ஆயிரம் ஆண்டுகள்... இன்னுமோர் ஆயிரம் ஆண்டுகள்... பின்னோக்கிச் சென்று எனது உயிர்ப்புடன் கலந்து கொள்வதாய் ஓர் குழப்பமான நினைவுகள் படருகின்றன.

எனது நிலை சிறிது தடுமாறுவதாய்...

..."ஆங்.....ம்...."

மெது மெதுவாக அவற்றிலிருந்து விடுபட்டு, எனது ஆசைகளின் அடுக்குகளை ஒவ்வொன்றாய்ப் பிரிக்கிறேன்.

எனது ஆசைகள் ஏற்கனவே பிரிக்கப்பட்டு, மொழி பெயர்க்கப் பட்டனவாய்க் காணப்படுகின்றன.

எனது ஆசையின் மூலத்தினைக் கொண்டு மொழி பெயர்த்த பிரதி மட்டும் அங்கே காணப்படுகின்றது.

எனது ஆசையின் மூலத்தினைக் காணவில்லை. எனது நினைவடுக்கின் சேமிப்பினைக் கொண்டு மொழிபெயர்க்கப்பட்ட ஆசையின் பிரதியில் மூலத்திற்கு அண்மித்ததாய் வார்த்தைகளைத் தேடினேன்.

நீண்ட வருடங்களில் "தேன்" இரத்தமென மாற்றம் கொண்டிருந்தது. கூசாவினை மீண்டுமொருமுறை பார்க்க வேண்டு மென நினைத்துக் கொண்டேன்.

"பல்லாயிரம் தமிழர்களின் தலையாலான மாலை" என மீண்டுமொன்று.

இது கால நீட்சியின் மொழி மாற்றமா?

இல்லை...? ம்...!

தொடர்ந்து ஏட்டினை வாசிக்க வேண்டிய தேவையில்லை யென அவற்றிலிருந்து எனது உணர்வுகளை நான் திருப்பிக் கொண்டாலும், தொடர்ந்து வாசிப்பதற்கு எனக்கு ஏற்பட்ட பயமே முதற்காரணம்.

ஏனெனில் தேன், அல்லிமாலை, தளபதியின் தலை....என எனது ஆசைகளின் கிடைப்பிடத்தை ஒன்றெனப் பிணைத்து ஆசையின் மூல நாயகியாய் என்னை அடியிலே முத்திரை

குத்திருப்பார்கள்.

எனினும் காலங்கள் வழியே கடந்து வரும் எண்ணங்களினாலான மொழிபெயர்ப்பை முழுவதுமாய் புரிந்து கொண்டேன்.

சரி! எனது ஆசைகள் நிறைவேற்றப்பட வேண்டுமே.

இன்றைய வேளையிலும்...

எனது ஆசைகளை நிறைவேற்றும் என் அருமை மைந்தன் எங்கே?

யன்னலை நோக்கி ஓடினேன், எட்டிப் பார்த்தேன்.

காமினி அபயா!

முன்பு போலவே விசாலமான கட்டிலில் ஒடுங்கியபடி சயனித்திருந்தான்.

நீண்ட தூக்கம்.

கண்ணாடி அறைக்குள் விழிப்பதற்குரிய அறிகுறி எதுவுமேயின்றி அசையாது கிடந்தான். கண்ணாடிக் கூண்டிற்கு வெளியே பலருக்கு அவனது நித்திரை பற்றிய மொழி பெயர்ப்பு நிகழ்த்தப்படுவதைப் பார்த்தேன். தங்களில் என்மகனை உணர்ந்து கொள்ள பலர் படுக்கையில் நித்திரை பழகிக் கொண்டிருந்தார்கள். எனது கனவுகளில் இருந்து மீண்டெழுந்த நான் எனது சிறையினை மீண்டும் பார்த்தேன்.

எனக்கான உணர்வுகள் என்னைத் தொற்றிக் கொண்டன. நான் விழித்தெழும் ஒவ்வொரு வேளையிலும் எனது ஆசையினை நிறைவேற்றிக் கொள்ளும் அவா எனக்குள் புகுந்து கொள்வதுண்டு. இன்றும் அது என்னை பிடரிபற்றித் தள்ளியது. எனது ஆசையின் பிரதிகளை தூக்கிக் கொண்டேன். யானைகள் அணிவகுத்து நின்றன. படைவீரர்கள் கவசம் பூண்டு ஆயுதம் தாங்கி என் வார்த்தைகளை எதிர்பார்த்து காதுகளில் உயிர்ப்பினை நிறைத்திருந்தனர்.

நான் நீண்ட வாளுடன்...

மீண்டும், தேவியாய் எழுந்தேன்.

- வெளிச்சம் - 2003

## தேங்காய்ச் சொட்டு

அம்மா ஒவ்வொரு நாளும் எரிச்சலோடும் சலிப்போடும் சொல்லிக் கொண்டிருப்பா.

"அரிசிப்பையை ஓட்டை போட்டுட்டுது..."

"அப்பளத்தைக் காணேல்ல..."

"தேங்காய்ப் பாதியைச் சுரண்டிப் போட்டுது...

இப்படி அடிக்கடி அம்மா முணு முணுத்துக் கொண்டிருப்பா... இதுக்கு என்ன செய்யிறது? ஒரு நாளெண்டாலும் பறவா யில்லை. எந்தநாளும் இப்படித்தான். சரியான தொந்தரவு... என்ன செய்யலாமெண்டு யோசிச்சன்... எலிப்பொறி கண்ணில் பட்டுது. எனக்கு பாவமாத்தான் இருந்துது... ஆனால் என்னத்தச் செய்யிறது?

அணில் தேங்காய்ச் சொட்டின்ர மணத்துக்குக் கட்டாயம் வருமெண்டு எனக்குத் தெரியும்.

இந்த அணில் தேங்காய்சொட்டத் தேடிவாறத நினைச்சுப் பாக்கேக்குள்ள,

நாங்கள் எந்தச் சொட்டப் பாத்து யாழ்ப்பாணத்துக்கு திரும்பி வந்தனாங்கள் எண்டு எனக்கு மட்டுமில்ல வந்த எல்லாருக்கும்... பிறகு கூட விளங்கேல்லைத்தான்.

சரி வந்தது தான் வந்தம்... ஆனா இங்க... அந்த அணில் மாதிரி என்ன தொந்தரவு செய்தனாங்கள்? நாங்களும் எங்கட பாடு மெண்டு அவங்கள் சொன்னதக் கேட்டுக் கொண்டுதானே இருந்தம்.

ஒருத்தற்றை சோலிக்குக் கூடப் போகேல்லை.

நான்... அணிலைக் கூட... எத்தினதரம் யோசிச்சு... மன மில்லாம கடைசியா அதின்ர ஆக்கினை பொறுக்கமாட்டாமத் தான்...

ஆனால்... நாங்கள்?

இவங்கள் எங்களை இப்பிடிச் செய்யிறதுக்கு முன்னால்... நான் அந்த அணிலுக்காக யோசிக்க மாதிரி யோசிச்சிருப்பாங் களே? அப்படியோசிச்சிருப்பாங்களெண்டு நானெண்டா நினைக் கேல்ல.

அந்தப் பொறியை ஏத்திப் போட்டுப் பட்டபாடு எனக்குத்தான் தெரியும்.

அணில் கீச்... கீச் எண்டு கத்தேக்குள்ள... நெஞ்சுக்குள்ள ஒரு தடக்... பொறுக்கமாட்டாம... பொறியைக் கழட்டி விடுவமோ எண்டும் நினைச்சன். இடைக்கிடை பொறி வைச்ச இடத்தை ஓரக்கண்ணால பார்த்துக் கொண்டும் இருந்தன். அணில் வரேல்ல. எனக்கு அப்பிடிப் பாத்துக்கொண்டிருக்கத் தைரியமில்லை. எழும்பிப் போயேவிட்டன்.

எங்களை... அதுதான் என்னையும் என்ர சினேகிதியையும் பிடிச்சுக்கொண்டு பேகேக்குள்ள எனக்கு இதொண்டும் நினைவுக்கு வரேல்ல. லேசான பயந்தான் இருந்தது. விசாரிச்சுப் போட்டு விட்டிடுவாங்கள் தானே...

ஆனா... நாலைஞ்சு பேர்...

எனக்கு... பயங்கரமா ஏதோ நினைப்புகள்...

ஆரோ கையைப் பிடிச்சுக் கூட்டிக் கொண்டு வந்து

இருட்டுக்குள்ள தள்ளிவிட... சுத்திவரப் பேயள் நிண்டு குதிக்கிற மாதிரி... எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை.

மரத்துப்போன மாதிரி... ஏதொ ஒண்டு என்னைக் கௌவிப் பிடிச்ச மாதிரி...

அந்த நேரத்திலையும் நான் இததான் யோசிச்சனான்... நான் இல்லை... நாங்கள் அப்பிடி என்னதான் செய்தனாங்கள்? அதுக்கு இப்பகூட விடை கிடைக்கேல்லை.

நான் அந்த அணிலுக்கு வச்ச பொறியை எடுத்து விடுவமோ எண்டு யோசிச்ச மாதிரி அவங்கள்... யோசிச்சிருப்பாங்களே...? அப்பிடி யோசிச்சிருக்க மாட்டங்களெண்டு அப்பதான் விளங்கிச்சுது. முந்திக் கேள்விப்பட்ட விசயங்களுக்கு இப்பதான் வடிவம் கிடைச்சுது,

நான் அந்த அணிலைப் பிடிச்சு வைச்சு ஒரு சித்திரவதை கூடச் செய்யேல்லை. அதைச் சீண்டி விட்டு வேடிக்கை பாக்கேல்லை. அதுக்குப் பல்லால கடிக்கேல்லை, நெருப்பால சுடேல்ல, அடிக்கக் கூட இல்லை, அதின்ர தன்மானத்தைச் சுடுற மாதிரி மானத்தோட விளையாடேல்ல.

ஒரேயொரு சத்தந்தான். "படார்" எண்டு கேட்டுது. ஓடிப் போய்ப் பாத்தன், தலை பொறியுக்குள்ள அம்பிட்டுட்டுது. பொறியை ஒரு சுற்றுச் சுற்றி இழுத்துப் போட்டு அடங்கிவிட்டுது; கண நேரந்தான்.

ஆனா... அவங்கள் எங்களை... நாள் முழுக்க அறையுக் குள்ள அடைச்சு வைச்சு... வாறவங்கள் போறவங்களெல்லாம்... அதுகளெல்லாம் என்னத்துக்கு இப்ப...

இப்பகூட... அதை நினைக்கேக்குள் முகம் உடம்பெல்லாம் தீப்பிடிச்ச மாதிரி... அப்படி ஒரு உணர்வுதான்... ஆனா என்ர உடம்பு?

எங்களை மோசமா சித்திரவதை செய்தாங்கள். என்னென்ன செய்யமுடியுமோ எல்லாம் செய்தாங்கள். முதலில் பெருங்குரலில அலறினனாங்கள்தான்... ஆனா போகப்போக...

குரல் வரேல்லை. எவ்வளவு நேரமெண்டு அலறுறது? தொண்டையும் வறண்டு போட்டுது.

உடம்பெல்லாம் கந்தலாப் போன மாதிரி... தொய்ஞ்சு கிடந்துது...வேதனை. உடம்பெல்லாம் நோ... அசையமுடியேல்ல, நெருப்புப் பிடிச்ச மாதிரி ஒரு உணர்வு. கண்ணில சூடான நீர்திரண்டு வழிஞ்சுது. சிகரெட்டுப் புண்களும் பல்லுக்காயங்களும் அடியின்ர வலிகளும் மரத்துப் போன மாதிரி நினைப்பு.

எனக்கு என்மேலேயே ஆத்திரம் வந்தது. ஏன் இன்னும் உயிர் போகேல்லை?

இருட்டினாப்பிறகு ரெண்டு பேர் வந்தாங்கள். என்னையும் என்ர சினேகிதியையும் இழுத்துக் கொண்டு போனாங்கள். அந்த இருட்டுக்குள்ள காத்தின்ர "ஊ" எண்ட ஊளையில அது ஒரு வெளியெண்டு தெரிஞ்சுது, அதோட நடக்கப் போறதும் தெரிஞ்சுது.

அணில் பொறியில அம்பிட்டவுடன் நான் அம்மாவக் கூப்பிட்டன். அதை அங்கால தூக்கிக் கொண்டு போகச் சொல்லிக் கத்தினன். அம்மா குசினிக்குள்ள இருந்தபடியே என்னையே தூக்கிக் கொண்டு போய் வெளியில போடச் சொன்னா.

"ஐயோ எனக்குத் தெரியாது" எண்டு நான் அந்தப் பக்கமே பாக்காமல் வெளியில ஓடிவிட்டன். பேந்து அதை... தம்பிதான் எடுத்துக்கொண்டுபோய் வெட்டித் தாட்டவன்.

அண்டைக்கு நான் திரும்ப வீட்டுக்குள்ள போனபோது பாத்தன், அது கொஞ்சம் பெரிய அணில் மாதிரி எனக்குத் தெரிஞ்சுது. வளையில் இருந்து கொண்டு வாலைத் தூக்கி அடிச்சபடி கீச்... கீச்... எண்டு கத்திக் கொண்டிருந்தது.

அது தாய் அணில் போல... ஓ! அதுதான் அந்த... அடிபட்டுச் செத்ததின்ர தாய்... அது அண்டுமுழுக்க அந்த இடத்தில நிண்டு வாலை அடிச்சுக் கொண்டு... கத்திக் கொண்டே இருந்துது. இடைக்கிடை வளையில் அங்கையுமிஞ்சையும் ஓடிப்போட்டு வந்து திரும்பவும் கத்திச்சுது.

அது தன்ர குட்டியணிலக் கூப்பிடுறது போல எனக்கு இருந்தது. நிலைகொள்ளாமல் அது தவிச்சுக் கொண்டிருந்தது எண்டு நான் ஊகிச்சன். எனக்குச் சரியான கவலையாக இருந்துது. அந்தத் தாயணில் அழுகிற மாதிரி ஒரு நினைப்பு.

எனக்கு அண்டைக்கு நித்திரையே வரேல்லை. அழுது கொண்டுதான் படுத்திருந்தன்.

இப்ப... எனக்கு தாயணில நினைக்கேக்குள்ள என்ர அம்மாவின்ர நினைப்புத்தான் வரும்.

அவவும் இப்பிடித்தான் ரியூசனுக்கு போனபிள்ளை வருகுது... வருகுது... எண்டு வாசலையே பாத்துக்கொண்டு நிண்டிருப்பா. எத்தின நாள் சாப்பிடாம சுருண்டிருப்பா... எவளவு இரவுகள் நித்திரை இல்லாம கண்ணீர் விட்டுப் புலம்பியிருப்பா.

எனக்கு இப்பவும் கவலையாகத்தான் கிடக்குது. எங்களுக்கு முதல் புதைஞ்சவையையெல்லாம் கிண்டித் தூக்கி ஆராய்ச்சி செய்யினம். அம்மாவுக்கு... அது... என்ர நினைப்பை இன்னும் நல்லாய்க் கிளறி விட்டிருக்குமெண்டு நினைக்கிறன். அங்கை அம்மா... என்னை அடையாளங்காண, காத்துக் கொண்டிருப்பா.

அது சரி... அந்தக் குட்டியணிலின்ர கெதி மற்ற அணிலுகளுக்கும் தெரிஞ்சிருக்குமோ? தெரிஞ்சிருக்காதெண்டுதான் நினைக்கிறன். அப்பிடித் தெரிஞ்சிருந்தா தேங்காய்ச் சொட்டைத் திரும்பிப் பாக்குங்களே!

ஆனா... எங்களைப்பற்றித் தெரிஞ்சிருந்தும் எத்தினபேர் சொட்டை சுவடெடுத்துத் தேடிவருகினம்! இதுக்கு என்னத்தை செய்யிறது?

ம்... எனக்கேன் மற்றாக்களைப் பற்றிக் கவலை? அம்மாவை நினைக்க...

ஓ... அந்தத் தாயணில் தான் தன்ர குட்டியணிலின்ர உடல்க் கூட்டை கடைசி வரையும் கண்டிருக்காது.

அதுமாதிரி அம்மாவும்...

- ஈழுநாதம், சரிநிகர், "எழு" சிறுகதைத்தொகுதி. 1999, 2000

# பசியடங்கா இருள்

நான் படுக்கையில் படுத்திருந்தபடி நெருங்கிவரும் இருளையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மா ஒருவரை என்னருகே அழைத்துவந்து இருத்தினாள். நான் அவரை அடையாளம் கண்டு கொள்வதற்கு முனையவில்லை.

அவரின் உருவம் இருளின் செழுமையுடன் கலந்திருந்தது.

வந்தவர்,

"தம்பி... எப்பிடி இருக்கிறாய்...?"

நான் அவரைப் பார்த்து சிரித்தேன். உதடுகள் சிரமப்பட்டு பிரிந்ததில் சிறிது வலி எட்டிப்பார்த்தது.

"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்..." உதடுகள் வார்த்தைகளின் பரிச்சயத்தைக் குறைத்திருந்ததால் சிரமப் பட்ட முணுமுணுப்பாக அது என்னிலிருந்து, மிக ஆறுதலாக வெளிப்பட்டது.

பெரிய பெருமூச்சு ஒன்றுடன் அவர்

அமர்ந்திருந்தார்.

"நந்தினி அக்காவின்ர சிந்து இப்ப வளந்திருக்குமோ"

எனது உதடுகள் மீண்டும் பிரிந்தன.

"தம்பி... இது உன்ர ரஞ்சன் அண்ணை" அம்மா என்னருகே வந்து தலையைத் தடவியபடி கூறினாள். நான் மீண்டும் அவரை உற்றுப்பார்த்தேன்.

"இல்ல.. சரவணன் வாத்தியின்ர மீசை மாதிரி.." என்று கூறிய பின் நீண்ட நேரம் முகட்டைப் பார்த்தவாறு படுத்திருந்தேன்.

ஏதோ ஞாபகத்தில் மீண்டும் அவர்கள் பக்கம் பார்வையைத் திருப்பினேன். போயிருந்தார்கள். மீண்டும் முகட்டில் தொங்கும் தூசியில் எனது பார்வையைக் கொழுவினேன்.

ஜன்னல் கம்பிகளில் மெதுவாக சுரண்டுகிற சப்தம்தான், அது என்பதை கண்டுபிடிக்க எனக்கு சிறிது நேரம் எடுத்தது.

எங்கோ தொலைவில், காற்று வதைபடுகிறதெனவே நினைக்க முடிந்தது. மூடியிருந்த இமைகளைப் பிரித்தேன். மிகக் கடினமாகவும் எரிச்சலாகவும் இருந்தது. நெற்றியின் இருபக்கங் களும் வலித்துக்கொண்டிருந்தன. ஓர் இழையைச் சுண்டி விட்டது போல சடக்கென உச்சந்தலையிலிருந்து மண்டைக்குள் பாய்ந்து சென்றது வலியின் கீற்று ஒன்று.

மீண்டும் அந்தச் சத்தம்.

ஜன்னல் கம்பிகளில் இலேசாக உராய்கின்றது போல...

"ஓம் அப்பிடிப் போலதான்..."

நான் படுக்கையிலிருந்து எழுந்தமர்ந்து, போர்வையை என்னிலிருந்து வழித்து ஒதுக்கிப் போட்டேன்.

ஜன்னலால் எட்டிப்பார்த்தேன்.

ஒன்றுமே தெரியவில்லை. முற்றத்தில் நிலவின் ஒளி வெண்மையாக படர்ந்திருந்தது. வலப்புற ஓரத்தில் அந்தச் சிறிய விலாட்டு மாமரம் மட்டும் இருட்டினை தனக்குள் இழுத்து

வைத்திருந்தது.

மாமரத்தின் கிளைகளின் நுனிகளில் இருந்து இருட்டுக்கள்; கொத்துக் கொத்தாக வெண்ணிலத்தில் குதித்துக் கொண்டி ருந்தன. அந்த உதைப்புகளினால் கிளைகளில் ஓர் ஆவேசமான அசைவு தெரிந்தது.

காற்றும் முற்றத்தில் மண்ணினை சுழற்றி, சீண்டிக் கொண்டிருந்தது. மீண்டும் எனது கவனத்தின் இழை சுண்டி இழுக்கப்பட்டது. திடுக்கிட்டு சுற்றும் முற்றும் பார்த்தேன். ஒன்றை யுமே காணவில்லை. ஆனால் இலேசான மூச்சிரைப்பு கேட்பது போலிருந்தது.

"ம்... மூச்சிரைப்பா அது...இல்ல.... இலேசான விம்மல்... ஓமோம்...யாரோ அழுகையை அடக்க முயற்சி செய்யிற மாதிரி..."

நான் வெளியில் பாய்ந்தேன்.

ஒருவரையுமே காணவில்லை.

ஆனால் நிலத்தில் பல காலடிகள் காணப்பட்டன.

"ஏன்... நீ...என்ன மறந்து போனியோ"

அழுகையை அடக்கிய மெதுவான குரல் கிசுகிசுப்பாக என்னைக் கேட்டது.

நான் மண்ணிலே அப்படியே குந்தி அமர்ந்தேன்;

" என்ன முழிக்கிறாய்...? உன்னுடைய கையை கீழ வை...."

நான் கையை மண்ணில் விரித்து வைத்தேன்.

கையில் எதுவோ ஏறுவது தெரிந்தது.

உற்றுப் பார்த்தேன் கண்கள் இலேசாக வலிகண்டன.

அது ஒரு காலடி!

" என்ன யோசிக்கிறாய்...நான் உன்னுடைய காலடிதான்... இங்க நாங்கள் கனபேர் வந்திருக்கிறம்...உன்னைப்பாக்க..."

நான் அந்த காலடியை - என்னுடைய காலடியை உற்றுப் பார்த்தேன்.

அது வரண்டு, இலேசாக சுருளத் தொடங்கியிருந்தது. ஆங்காங்கே உதிர்ந்து உடைவதற்குரிய நிலைமைகள் தெளிவாகத் தெரிந்தன.

"வீதிகளில், ஒழுங்கைகளில், நூலக முற்றங்களில்... இப்பிடி ஊரில இருக்கிற எல்லா இடங்களிலயும் நீ அடிக்கடி வந்து போறனி... அதனால நாங்கள் உயிர்ப்போட இருந்தம்... ஆனா இப்ப... நாங்கள் கொஞ்சம் கொஞ்சமா செத்துக் கொண்டிருக்கிறம்...."

ஒரு பெருமூச்சுடன் இன்னொரு காலடி சொல்லி ஓய்ந்தது.

நான் சிறிது நேரம் அப்படியே பார்த்தபடி இருந்தேன்.

" ஓமோம்...உங்கள உயிர்ப்பிக்க நான் வாறதில்ல... நான் என்னையே மறந்திட்டன்..."

எனக்குள் முணுமுணுத்துக் கொண்டேன்.

"இஞ்ச... உன்ர கையை கொண்டுவா..."

ஒரு காலடி முண்டியடித்துக்கொண்டு என்னருகே நெருங்கியது. நான் கையை வைத்தேன்.

" ம்ஆ..."

இதமான குளிர் எனக்குள் ஊடுருவியது.

தேர்முட்டிப்படிகள் தங்களை ஞாபகப்படுத்தும்படி கையயூட்டுக் கொடுத்து அனுப்பியிருந்தன. இதமான காற்று வீசுகின்ற முன்னிராப் பொழுதில் குளித்தபடி ஆட்டுப் புழுக்கைகள் ஒதுங்கிய படிகள், எனக்காக ஏங்கிக் காத்திருப்பதைக் காலடிகள் சொல்லின. எனக்குத்தான் காற்று, ஒவ்வொன்றையுமே முன்னமேயே சொல்லிவிடுகின்றதே. எனது காலடிகளின் படையெடுப்பு என்னை உணர்ச்சிவசப்பட வைத்திருந்தது. அழ வேண்டும்.

"அழு....அழு..."

நான் எனக்குள் சொல்லிக் கொண்டேயிருந்தேன்.

காலடிகளுடன் வாசல்வரை சென்றபோது காற்றின்

சுழட்டலில் எனது காலடிகளில் திரளாக சுற்றிக் கொண்டிருந்தன - வண்ணத்துப்பூச்சிகளின் இறகுகள்.

பல நிறங்களில், பல வடிவங்களில்... அவை அலைபாய்ந்து கொண்டிருந்தன, வண்ணத்துப்பூச்சிகளின் உயிர்களைத் தேடி.

*

மணல் கீழே கொதித்துக் கொண்டிருந்தது. மேலே சூரியன் சிரித்துக் கொண்டிருந்தான். அரையில் கட்டிய வேட்டி ஈரத்தை சொட்டிக் கொண்டிருந்தது. கைகளில் தேங்காயுடன் நான் அம்மாவைப் பார்த்தேன். அவளது கண்கள் முட்டி வழிந்து கொண்டிருந்தன. என்னை கெஞ்சலாகப் பார்த்தாள். அம்மாவைக் கண்களில் இருத்திக் கொண்டேன். உடலின் ஒவ்வொரு துடிப்புக்களாலும் அவளைப் பார்த்தேன்.

மணலில் நீட்டிப்படுத்து உருளத் தொடங்கினேன்.

அம்மா கண்களால் நீரைக் கொட்டி தான் நம்பும் கடவுளிடம் போகும் காற்றுக்கு தனது அரற்றலால் பாரத்தை ஏற்றிக் கொண்டிருந்தாள்.

அம்மா என்பின்னே அடியழிக்கத் தொடங்கியிருந்தாள். ஒவ்வொரு உருளலின் பின்னும் இருட்டு வைத்திருந்த இரகசியமும் அது கூறிய மந்திரங்களும் எனக்கு சித்தித்திருப்பதனை நான் ஞாபகங்கொள்ளத் தொடங்கினேன்.

*

இருட்டு என்னைப் பிடித்து தனக்குள் இழுத்தது. இழுக்கப் பட்டதால் தடுமாறி இருட்டுடன் முட்டிக் கொண்டேன். மூக்கு சூடாய் இரத்தத்தைத் தள்ளியதை விரல்களால் உணர்ந்தேன்.

“ இருட்டில் காற்றுக்கு கைகள் முளைக்கின்றன”

இது பலபேர் கூறிய அற்புதமான கதை. நான் அக்கதையின் சொற்களுக்குள் சிக்குப்பட்டிருந்தேன்.

சொற்கள் கடிக்கத் தொடங்கின. வார்த்தைகள் ஒரே மாதிரி யான உச்சாடனங்களாய் மாறி காற்றை அறையத் தொடங்கின.

எனது காதுகளும் அதிரத் தொடங்கின. காதுகள் அதிர்வின் எல்லையை கடந்த நிலையில், காற்று உச்சாடனங்களின் உயிர் நாடியைப் பற்றிப் பிடித்துக் கொண்டது. காற்றுக்குக் கைகள் முளைத்தன. காற்றின் கைகள் எனது உடலுடன் அற்புதமான ஏற்ற இறக்கங்களுடன் உரையாடத் தொடங்கின. எனது உடலுக்கு இது ஒரு புதிய மொழி. எனவே காற்றின் கைகளினது வீச்செல்லை களுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் சோர்ந்து துவண்டு விழுந்தது.

வெளி முழுதும் இருளைப் பழக்கப்படுத்தியிருந்த நான், சாக்கிற்குள் இருளைப் பின்தொடர்ந்து நுழைந்தேன். இறுகக் கட்டப் பட்ட சாக்கினுள் இருட்டும் நானும் சுருண்டு பிணைந்திருந்தோம்.

என்னைத் தின்னத் தொடங்கிய இருட்டுடன் நான் மௌன மாயிருந்தபோது, சாக்கின் மோகம் நீரின் பக்கமாய் இருந்தது எனது துரதிஷ்டம். சாக்கு ஆவேசத்துடன் கிணற்றுக்குள் பாய்ந்தது. சாக்குச் செய்தது தவறு என எனது உடல் எதிர்ப்புணர்வைக் காட்டியது.

இருளின் கடவுள் மேலிருந்து அனைத்தையும் பார்த்தான்.

அறிந்தான்,

விளைவு - எனது இருளின் பிணைப்பு தற்காலிகமாக விலக்கப்பட்டது.

இருள் காவித்திரிந்த இரகசியமும் மந்திரங்களும் என்மீது தொன்மங்களின் வழி, மாற்றமற்று கடந்துவந்த மனித நாகரிகத்தின் படங்களை அற்புதமாக வரைந்திருந்தன. இந்நிலையில் ஏமாற்றத்திற்குள்ளான இருள்; அதன் பின்பு என்னைப் பின்தொடரத் தொடங்கியிருந்தது. நான் செல்கின்ற எங்கும் இருளும் சற்று எட்ட நின்றிருக்கும். இருள் என்னைத் தின்ன மிகுந்த வெறி கொண்டிருப்ப தனை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. நான் நடந்து கொண்டிருந்தேன். இருளும் நடந்து கொண்டிருந்தது.

*

அம்மா அடியழிக்க அடியழிக்க, நான் உருண்டு கொண்டிருக் கின்ற பொழுதுகளிலும், இருள் என்னுடன் சேர்ந்து உருண்டு

கொண்டிருக்கின்றது. நான் இருளின் மணத்தினையே எங்கும் சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்.

இருளின் பரிச்சயத்தால் என்னைச் சுற்றியிருந்த காற்று கறுக்கத் தொடங்கியிருந்தது. காற்றின் ஒவ்வொரு இடுக்குகளிலும் கருமையின் செறிவு ஏறிக் கொண்டிருந்தது. காற்று இருளின் தூதனாகவே இருந்தான். ஆனால் அவனும் இருள்தான் என்பதை நான் விரைவில் புரிந்து கொண்டேன்.

நான் கொஞ்சம் கொஞ்சமாக சுவாசிப்பதைக் குறைத்துக் கொள்ள முயன்றேன். எனது படுக்கையறையின் யன்னலுக்கூடாக தெரியும் விலாட்டு மாமரமும் இலேசாக கருமையை உள்வாங்கத் தொடங்கியிருந்தது. நிலவொளி படரும் நிலமும் கருமையை தன்மேல் விழுத்திக் கொண்டிருந்தது. எனது விழிகள் கருமையின் செறிவை தனக்குள்ளும் உணரத் தொடங்கியிருந்தன. எனது உயிரின் முனையை இருள் பார்த்துக் கொண்டிருக்கிறது.

பரபரப்பற்று படுத்திருந்தேன்.

எனது உள்ளங்கைகளில் கருமையின் தீற்றலை உணர முடிந்த அன்றைய பொழுதில் எனது எழுத்துக்களை என்முன் குவிக்கத் தொடங்கினேன்.

நீண்ட இரவின் பொழுதுகளில் எனது எழுத்துக் களுடனேயே நான் படுத்திருந்தேன்.

தேநீருடன் வந்த அம்மாவால், எனது படுக்கையில் எரிந்திருந்த எனது எழுத்துக்களின் கருமையையே பார்க்க முடிந்தது.

- பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள் - தொகுதி

2006

## பெத்தாச்சி

வெயிலில் வெறித்திருந்த வளவுக்குள் பெத்தாச்சியின் நடமாட்டத்தைக் காணேல்ல... வரம்பால இறங்கி பெத்தாச்சி வீட்டு ஒழுங்கைக்குள் ஏறி நடந்தன். வீட்டு முத்தத்துக்கு கிட்டவா நிண்டிருந்த ரண்டு தென்னையையும் காணேல்ல. நடு முற்றத்துப் பனை நிண்டிருந்த புட்டியும் வெளிச்சிருந்தது.

அப்புவின்ர உடைஞ்சுபோன வண்டிலும் ஒருதற்ற கையும் படாததால உக்கத் தொடங்கியிருந்தது.

வீட்டுக் கூரை இறக்கத்தின் மூலை யோடுகள் உடைஞ்சிருக்கு...

ஒரு பக்கச் சுவரும் இடிஞ்சு, பிறகு கட்டினதுமட்டும்துருத்திக்கொண்டுதெரியுது...

நான் ஊர் பள்ளிக்கூடத்தில படிக்கேக்குள்ள நெடுகவும் பெத்தாச்சியோடதான் இருப்பன். இப்ப ரவுணுக்கு போனதால அவவை பாக்கக்கூட முடியிறேல்ல.

நானும் பெத்தாச்சியும்தான் ஆட்டுக்கு

குழைவெட்ட மணலுக்குப் போறனாங்கள். பெத்தாச்சியோட போறதெண்டா ஒரே கொண்டாட்டந்தான். நிறைய கதைய ளெல்லாம் சொல்லிக் கொண்டு வருவா. அவ சொல்லித்தான் இஞ்ச இருக்கிற ஒவ்வொரு இடமும் எனக்கு நல்லாத் தெரியும். ஊரில பாக்குற எல்லா இடத்திலயும் பெத்தாச்சியத்தான் என்னால காணமுடியுது.

மணல்ல பாலை, சீந்தில், தவிட்டை குழையளைத்தான் பெத்தாச்சி தேடித்தேடி அறுப்பா. அவவுக்கு தெரியும் எந்தெந்த ஆட்டுக்கு எந்தெந்த குழை பிரியமெண்டு. குழைவெட்டுறதுக் கெண்டு பிள்ளைத் தடியொண்டும் பெத்தாச்சியிட்ட இருக்கு.

ஒரு கைக்கடக்கமான தடியில கத்தி கட்டியிருக்கும்... குழை அறுக்குறதுக்கு தோதானதுதான்.

குழையோட திரும்பி வரேக்குள்ள ஒவ்வொரு விறகுக்கட்டும் கொண்டுவருவம். முக்காவாசித்தூரம் என்ர சின்ன விறகுக்கட்டை யும் பெத்தாச்சியே தூக்கிகொண்டு வருவா.

பூசின சுவரைப் பாத்துக்கொண்டு படலையடில நிண்டு கூப்பிட்டன்;

"பெத்தாச்சி... பெத்தாச்சி..."

"...ணேய் பெத்தாச்சீய்ய்..."

ஒரு அசுமாத்தத்தையும் காணேல்ல.

ஆனா கனபேர் கதைக்கிற மாதிரியான சத்தமும் கேக்குற மாதிரிக் கிடக்கு.

ஒருத்தரயும் என்னால பாக்க முடியேல்ல.

"கிழவி வீட்டில இல்லயோ"

கிழவி வீட்டில எங்க நிக்கும், குடு குடுவெண்டு எங்கை யெண்டாலும் ஓடிக்கொண்டெல்லே இருக்கும்.

இப்படித்தான் குழைவெட்ட ஒரு நாள் போனம். பெத்தாச்சி முன்னுக்குப் போய்கொண்டிருந்தா.

அவ கையில வச்சிருந்த பிள்ளைத் தடியை,

"ணோய் உத இஞ்ச கொண்டு வாணை..." எண்டு இழுத்தன்.

"டேய் பெடி பேசாம வா...இது உன்ர கையில இருந்தா அருமந்த குழையளையும் தடியளையும் அறுத்து விழுத்திக் கொண்டு வருவாய்... என்னட்டயே கிடக்கட்டும்... வா..."

மள மள வெண்டு மணலில் கால் புதையப் புதைய நடந்துகொண்டிருந்தாள்.

பாதை மாறிப்போட்டுது.

கிழவி எனக்குச் சொல்லேல்ல, அங்கையுமிஞ்சையும் எதையோ தேடிக்கொண்டிருந்தாள்.

கடற்கரையும் வந்துட்டுது... தூரத்துல அஞ்சு கொட்டிலுகள் தெரிஞ்சுது.

"அதென்னணை ஆச்சி"

தொலைவா மரங்களப் பாத்து கணக்குப் போட்டுக் கொண்டிருந்த ஆச்சி திரும்பி,

"அதுதான் மேன... வாடிவீடு"

"வாடிவீடோ....." கேக்கிறதுக்குள்ள ஆச்சியின் முகத்தப் பாத்து கேள்வியக் கைவிட்டன்.

யோசனைக்குள் புதைஞ்சிருந்துது முகம்.

"பெடியா வரேக்குள்ள அந்தக் கொடிய மிதிச்சனியே"

"எந்தக் கொடிய..."

"அது தான்ரா... பச்சையும் சிவப்புமா... சுருண்டிருக்கும்"

"காலுக்குள்ள ஏதோ இழுவட்டதுதான்...நான் பாக்க யில்லையணை..."

"உதுதான்ரா எங்கள இப்படி ஏய்க்குது" என்று பெருமூச்சு விட்டாள் பெத்தாச்சி.

நாங்கள் சுத்திச் சுழல சூரியனும் மணலை விட்டு மறைய தொடங்கிவிட்டான்.

"மேன கெதியா....அந்தா.... தூரத்தில தெரியிற பெரிய சவுக்கப் பாத்து நட... குண்டஞ்சி வீடா இருக்கோணும்....அங்க போனாச் சரி.."

"..............."

ம் பராக்கு பாக்காமல் நட"

அதட்டியபடி வேகமா நடந்தாள் பெத்தாச்சி.

குடுகுடுவெண்டு இப்பிடி ஓடிக்கொண்டிருக்கிற பெத்தாச்சி யாவது வீட்டில நிக்கிறதாவது.

படலையைத் திறந்துகொண்டு வீட்டுக்குள்ள போக கண்ணில பட்டுது, சரிஞ்சிரிருந்த பூவரசு. எனக்குள்ள ஏதோ அறுபட்டுது.

பெருமூச்ச இழுத்து விட்டபடி பூவரசப் பாத்தன்.

"ஆரோ வெட்டித்தான் விழுத்தியிருக்கிறாங்கள்"

அது பெத்தாச்சியின்ர வேலியில இருந்த மொக்குப் பூவரசு.

ஆச்சி அடிக்கடி எனக்கு பூவரசக் காட்டி சொல்லிக் கொண்டிருப்பா.

"டேய் ...மேன....இந்தக்குத்திதான் என்ர நெஞ்ச வேக வைக்கோணும்.... அதுக்காகத்தான் இத விட்டு வச்சிருக்கிறன்"

கிளைகள் அறுபட்டு மணலில் கிடந்த பூவரசப் பாத்தன்... கண்களில கண்ணீர் கீறியது.

யாரோ எனது கையப் பிடிச்சு பக்கத்திலிருந்த நிழலுக்குள்ள இழுத்திச்சினம்.

என்ர கண்கள் ஒருதரயும் அறிஞ்சு கொள்ளேல்ல.

காற்று மட்டும் சூடான மூச்சுக்களைக் காவி எனக்கு ஏதோ நினைபூட்டவெண்டு என்னில மோதிச் சுழண்டு திரிஞ்சுது.

நான் பூவரசையே வெறிச்சுப் பார்த்துக்கொண்டு நிண்டன்.

"இது பெத்தாச்சியின்ர பூவரசு"

ஒருக்கா எங்கட கடலைக்கு மயிலம்மான் என்னைக்

கூட்டிக்கொண்டு போய்க்காட்டினவர்,

"டேய் இஞ்ச பார் இது நேசத்த எரிச்ச இடம்... அதுதான் கொப்புவ எரிச்ச இடம்..."

அதில காடாத்திற்க்காக அணைச்ச பூவரசங் குத்திகள் நூந்திருந்துது.

கொஞ்சநேரம் அதைத் தொட்டபடியே குந்தியிருந்தன.

இடைக்கிடை லீவில ஊருக்குள்ள வரேக்குள்ள உடும்பு வேட்டைக்கும் பண்டி வேட்டைக்குமெண்டு இழுபட்டிருக்கிறன். அப்பவும் சுடலையும் பூவரசம்குத்திகளும் கண்ணில படும். பாத்துக்கொண்டே ஓடுவன். கண்கள் நனைஞ்சுகொண்டே கடக்க, மனமும் அதில தோஞ்சு சிலிர்க்கும்.

பத்து வருசமா என்னால எங்கட சுடலையை பாக்க முடியேல்ல. ஊருக்கு வாற நேரங்களிலயெல்லாம் நீளமான முள்ளுக்கம்பி வேலிய மட்டும் கொஞ்சநேரம் பாத்துத் திரும்பி யிருக்கிறன்.

திரும்பேக்குள்ள புதுசா இடம்பிடிச்சுக் காத்திருக்கிற புதுச்சுடலையையும் கடந்துதான் வருவன். ஊருக்கு நல்லாக் கிட்ட இருக்கிற சுடலை, மனசுல எந்த மூலையையும் அருட்டினதில்ல.

கண்ணீர் விழுந்து கைகள் குளிர்ந்திச்சுது. நிமிந்து பாத்தன், பக்கத்தில அம்மா இருக்கிறா. நான் எழும்பி படலையைக் கடந்து மெதுவா மணல் பக்கமா நடந்தன்.

"நேரம் போகுது நீ எங்கயடா போறாய்"

அம்மா கேக்குறது, தூரமாய் வந்தது.

எங்கட சுடலையை தேடினன்.

அப்புவின்ர, நேசத்தின்ர ஊமையப்புவின்ர, பெரியண்ணா வின்ர... எல்லாற்றையும் சுடலை இதுதான்.

கண்டுபிடிக்கேலாமல் கிடக்கு.

ம்... இந்த ஆலமரத்த மட்டும் கண்டுபிடிக்ககூடியதாக்கிடக்கு...

இதுதான் ஆசையையாவின்ர அண்ணன் படுத்திருந்த ஆலடி.

ஆசையையாவின்ர அண்ணன் மூளை சுகமில்லாமல் மணலுக்கு வந்து ஒரு பத்தையச் சுத்து சுத்தெண்டு சுத்தி, பிறகு இந்த ஆலடியில தான் படுத்திருந்தவராம்.

வல்லிபுர சுவாமியை இந்த ஆலடியில வைச்சுத்தான் பராமரிச்சவை...

எனக்குத் தெரியும்.

ஆலமரம் மிகப்பெரிசாய் பெரிய இடத்தை பிடிச்சு வைச் சிருக்குது.

நிலத்தில குப்பையளும் தடியளும்.

வல்லிபுர சுவாமி இப்பவும் இருக்கிறாரோ?

ம் கூம் .... பராமரிக்க இஞ்ச ஒருத்தரும் இல்ல.

அண்ணன் மாதிரி ஆலமரத்த நான் சுத்தத் தொடங்கினன். கொஞ்ச நேரத்துல ஏலாமப் போட்டுது.

நாக்கு வறளத் தொடங்கீட்டுது.. உடம்பெல்லாம் தொய்ஞ்ச மாதிரி...

நிழலில சுருண்டு படுத்தன்.

பெத்தாச்சி தன்னை எங்கட சுடலையிலதான் எரிக் கோணும் எண்டு வாய்க்குவாய் சொல்லுறவ...

பெத்தாச்சிய நினைக்க நினைக்க மனசு கீறுப்பட்டு, வலிதான் பெருகுது.

...அங்க.....பெத்தாச்சி... பொக்கைவாய்ச் சிரிப்போட அப்புவின்ர வண்டில்ல ஏறியிருக்குறா.....

என்னப்பார்த்து கை காட்டுறாவோ.....!?

எனக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்துது.

மணலில முகம் புதைய அழுதுகொண்டேயிருந்தன்.

- உதயன் - 2011

# பாம்பின் காலம் இரண்டு

மரக்கட்டைகள்/43
மரத்தில் தொங்கும் பாம்பு/49
என்னைப்பற்றிய பிற்குறிப்பு/54
அணங்கு/60
ஒரே வானம்/66

## மரக்கட்டைகள்

கேட்கின்ற கேள்விகளும், ஒரு வாய் உணவும் எனது வாய்க்கு அருகருகான அர்த்தத்தையே கொடுத்திருந்தது. இரண்டுக்குமே திறக்கச் சொல்கிறது மனது. வாய் மட்டுமல்ல எனது உடல் முழுதுமே உலர்ந்திருக்க உணர்ந்தேன். உலகின் ஈரமெல்லாம் கொணர்ந்தாலும் போதாததாய் மனமெங்கும் அனலடித்துக் கொண்டிருந்தது.

இங்கு வெளியேயும் ஒரே அனல். முகாமைச் சுற்றிவர உயரமாய் அடிக்கப் பட்டிருந்த முட்கம்பி, காற்றைக் கீறிக்கீறி அனலுக்கு உக்கிரமேற்றிக் கொண்டிருந்தது.

கடந்த நாட்களில் காற்றுக்கு நண்பனாக நான் முயற்சித்துக் கொண்டிருந்தேன். அதற்கு என்னிடமில்லாத எல்லை கடந்தவைகளை அது கொண்டிருக்கிறதே என்பதும் ஒரு காரணம்தான். காற்று என்னிடம் சற்றுப் பிரியப்பட்டிருந்தது என்பதை சில நாட்களிலேயே நான் உணர்ந்து கொண்டு

விட்டேன். மேலும் ஒரு சில நாட்களிலேயே முகாமுக்குள் ஒதுக்குப் புறமாய் அடைபட்டிருந்த ஒரு மரத்தினை நானும் காற்றும் சேர்ந்து எங்கள் நண்பனாய் அடையாளங்கண்டு கொண்டோம். மூவரும் காற்றுக் கண்டு வரும் கவனிப்புச் சோர்ந்த நேரங்களைத் தேர்ந்து பேசிக்கொள்வோம்.

காற்றும் மரமும் சேர்ந்து எனக்கு எப்போதுமே ஆறுதலைத் தந்து கொண்டிருந்தன. தமது நண்பனின் உயிரை இரண்டும் மாறி மாறி வருடிக் கொண்டன. எனக்கு உயிர்ப்பைத் தந்து கொண்டிருக் கின்றன. காற்றுடன் பேசுகின்ற பொழுதுகளிலெல்லாம் அது வைத்திருப்பவற்றையும் உளவு பார்க்க முயன்றேன். நான் ஓடி வந்த வெளிகளில் அடங்கிய மூச்சுக்களை காற்றுத்தானே வைத்திருக் கிறது. மூச்சுக்களைப் பிரித்தறியும் பக்குவமும் வல்லமையும் என்னிடமிருந்து சென்று விட்டன. அன்பும் பாசமும் அடியிலேயே அடங்கிக்கொள்கின்றன.

கடந்து வந்த வெளியில் முக்குளித்த ஓலங்கள், இன்னமும் அடங்காமல் காற்றுக்குள்ளேயே இருக்கின்றன. அழுகைகள் என்னை நோக்கி ஓடி வருகின்றன. இரத்தம் சொட்டிக் கொண்டே இருக்கிறது... காதுகளைப் பொத்திக் கொண்டேன்.

"அண்ணை என்னைத் தூக்கிக் கொண்டு போங்கோ"

ஒற்றைக்கால் அறுந்து போன அந்தச் சிறுமியின் அந்தரிப்பான கண்களும், பின்பு எனது கைகளில் நிலைத்துப்போன அதே கண்களும் மாறி மாறி என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தன.

பெருமூச்சு விட்டு நண்பனைப் பாரமாக்க விரும்பாமல் கண் களை இறுக மூடி மரத்தின் அடிப்பரப்பில் சாய்ந்து கொண்டேன்.

காதுகளடைபட வைக்கும் கேள்விகளால் களைத்துப் போனது உடல்.

உடம்பிலிருந்து அனைத்தும் வடிந்திறங்கியது போல் துவண்டு அமர்ந்தேன்.

"உம்மட மச்சான் உம்மப் பார்க்க வந்திருக்கிறாராம்... வெளியில நிக்கிறார்..."

மெதுவாய் மரத்தில் கைகளை ஊன்றி எழுந்தேன். கம்பிகளுக்கு அப்பால் அவன் நிற்பது தெரிந்தது. மூன்று வருடங்களிற்கு முன்புதான் அவனைப் பார்த்திருந்தேன். அதிக மாற்றங்கள் தெரிந்தன.

என்னை இனங்கண்டு விட்டான்.

"அத்தான்..."

மெதுவான குரலில் கூப்பிட்டான்.

அவன் கொஞ்சம் பயந்த சுபாவமும் கூச்ச உணர்வும் கொண்டவன், எனினும் தேடிப் பிடித்து வந்து விட்டான்.

"சசி... எப்பிடியிருக்கிறாய்...? அக்கா... பிள்ளையள பாத்தனியே..."

பரபரப்புடன் வாய் முந்திக் கொண்டது.

"இருக்கிறன் அத்தான்... அக்காவும் பிள்ளையளும்... அங்க முகாமில இருக்கினம்... பிரச்சினையில்ல... நீங்கள் எப்பிடி...?"

தயக்கத்துடன் யோசித்து வார்த்தைகள் வந்தன. அவனது கண்களும் கலங்கியிருந்தன.

எனது இளையவள் செத்துப் போனதும் மனைவிக்கு இடக்கால் இல்லையென்பதும் எனக்குத் தெரியும். அவனுக்கும் தெரியும், மறைக்கிறான்.

அவனது கண்களிலிருந்து கண்ணீர் இறங்கிக் கொண்டிருந்தது. நான் கை நீட்டித் துடைக்க முடியாத தூரத்தில் கம்பிக்கு மறுபுறத்தில் சசி நின்று கொண்டிருந்தான். அவனுக்கான நேரம் முடிந்து விட்டது, புறப்பட போகிறான்.

"அத்தான் இத வச்சிருங்கோ..."

முள்ளுக்கம்பிக்கூடாக கையினை எட்டி நீட்டினான்.

அதற்குள் சில ரூபாய்த் தாள்கள் சுருண்டிருந்தன.

சற்று வெறிக்கப் பார்த்தேன். பின் அதனை வாங்கிக் கொண்டேன்.

நான் மீண்டும் மரத்துக்கு கீழே வந்து அமர்ந்தேன்.

"எல்லாம் இயல்பாகவேதான் இருக்கின்றனவா?"

எனக்கு யோசிக்கப் பிடிக்கவில்லை. அப்படியே மரத்தின் வேர்களில் படுத்திருக்க, காற்று வந்து தடவிக் கொண்டிருந்தது.

நான் எனது முகத்தினை வருடிப் பார்த்தேன். நாடிப் பகுதி யில் எரிச்சல் சூடாய் நின்றது முகத்தைச் சுளித்துக் கொண்டேன்.

" என்ன நண்பா... முகத்த நல்லாத்தான் செதுக்கிப் போட்டாங்கள் போல்... உனக்குக் கொஞ்சமெண்டாலும் அளவில்லாத அச்சு அது..." ஆறுதலாக இதமாய் வருடியபடியே காற்று கேட்டது.

"அவங்களுக்கு மண்டேக்குள்ள ஒண்டுமில்ல... அந்த முகத்தின்ர அச்சைக் கொண்டு வந்து என்ர முகத்தில அமத்துறாங் கள்... அதுகும் முகமெண்டு பாக்காமல்... மரக்கட்டைல இறுக்கிற மாதிரி..."

சொல்லும் போதே முகம் முழுவதும் கொதித்தது.

மீண்டும் காற்றைப் பார்த்துச் சொன்னேன்.,

"அந்த முகம் எனக்குத்தானெண்டு தீர்மானிச்சுப் போட்டாங்கள்... எப்பிடியோ பூட்டத்தான் போறாங்கள்..." காற்று மௌனித்திருந்தது.

"பொறுமையாயிரு... வெளியில ஏதும் கதைச்சுக் கொண்டிருப்பாங்கள்... நல்லது நடக்கும்"

மரம் அமைதியைக் கடந்து ஆறுதல் சொன்னது.

காற்று மௌனத்தைவிட்டு மீளவேயில்லை. அது சொல்வதற்கு என்ன இருக்கிறது. பசியடங்கா இருளைப் பற்றி கூறுகின்ற பொழுதே எல்லாவற்றையும் எனக்குக் கூறிவிட்டது.

உயிரறுந்து தொங்குகின்ற வேதனையில் ஒருவன்... இல்லை ஒரு கூட்டமே பதைக்கின்ற பொழுதுகளில் அவர்களைச் சூழ நின்று ஆராய்கிற, கூட்டம் போட்டு கதை பேசுகிற, தேனீர் குடித்த வாய்களை அழுக்குப்படாத துணிகளால் ஒற்றியெடுத்துச் சிலாகிக்கின்ற பெரிய மனிதர்களைப்பற்றிக் காற்றும் சொன்னது. என்னைப்போல் ஒரு கை மூச்சைக் கையிருப்பில் வைத்திருக்கின்ற சிலபேர் அவர்களை நம்பித்தான் இருக்கிறார்கள்.

ஆனால் காற்றுச் சொல்லாமலேயே எனது மனிதர்களின் இயல்புகளை நான் உணர்ந்து கொள்கிறேன்.

சிறுவர்களதும் பெண்களதும் நிர்வாண உடைகள் மலத்திலும் இரத்தத்திலும் தோய்ந்து போய்க் கிடக்கின்ற பொழுதுகளிலும், பீதியையும் வலிகளையும் விதைக்கும் நீரால் அவர்கள் கழுவப்படுகின்ற பொழுதுகளிலும், புனிதப்படாமல் இறந்தே போகிறார்கள்.

யாசகமாய் வந்து விழுகின்ற மரணத்தின் கொழுந்துகள் எல்லோர் மடியிலும் வளர்கின்றன. எனக்குள்ளும் எனது நண்பர்களால், உறவுகளால் என்னதான் செய்ய முடியும். பிள்ளைகளை அணைத்துக் கொள்வர், மனைவியை முத்தமிடுவர், உடல் மீது முயங்குவர், வியர்த்து வழிய களைத்துப் படுப்பர்.

"எனக்குப் புரிகிறது உண்மையில் ஒட்டுமொத்தமான ஒரு கோணல் பார்வையை நான் பார்க்கிறேனோ?" என்னால் முடியவில்லை. எனது வேதனைகளும் அருகிலிருப்பவர்களின் அரற்றல்களும் எனது சிந்தனையைக் கொல்கின்றன. எனக்குள் வளர்ந்து வந்த, முனைப்படுத்தி நிற்கின்ற என்னுணர்வுகளைக் கஞ்சி தந்து, சோறு தந்து, பாண் தந்து, தண்ணீர் தந்து அணைக்கிறார்களோ?

"ஏய் கொஞ்சம் அடங்கியிரு" எனது மனதை அதட்டுகிறேன். அது தன்னிச்சையாகவே படங்களைக் கீறிச் செல்கிறது. ஆனால் எனக்குத் தெரியாமலேயே அனைத்தும் சேர்ந்த என்னுணர்வுகளை வளர்த்துச் செல்கின்றன.

"என்ன நண்பா... நல்லாச் சோர்ந்து போனாய்" காற்று மெதுவாக என்னுடலைத் தடவியது.

"நண்பனே... உன்னை நான் என்ர நண்பனா... மனுசியா, பிள்ளையளா உணருறன்... அதனால்... ம்... ஆனா நீ என்னை வருடுறத மட்டும் நிப்பாட்டிக் கொள்" காற்று அசையாமல் மௌனமாய் என்னை ஒரு கணம் பார்த்தது.

"இல்ல நண்பா... இந்த வருடலை என்னால தாங்கேலாமல் கிடக்கு... வலியும் நோவும் நிரந்தரமானப்பிறகு இந்த வருடல் எதுக்கு...?"

காற்று சற்றுப் பாரமாய் மரத்தினைச் சுற்றிவந்து பின் அதன் கிளைகளில் அமர்ந்து கொண்டது.

"நண்பா உன்ர முகம் நல்லாத் தாக்குப் பட்டுப்போச்சு... தோலெல்லாம் கழரத்தொடங்கியிட்டுது..."

மரம் மெதுவாகக் காதுக்குள் நினைவூட்டியது.

நான் எனது கைகளில் செதுக்கி வைத்திருந்த, என்முக அளவுள்ள அதனைப் பார்த்தன். எனது முகத்திற்கு இதுதான் பொருத்தமானதென்று அவர்கள் ஒன்றைப் பொருத்த முனைகின்றார்கள்.

நானும் பொருத்திப் பார்க்கின்றேன்.

எனது இரண்டு நண்பர்களிடமும் கூறுவதற்கு எனக்கு, அதிக விடயங்களுண்டு. எனினும் ஒரு துளி மூச்சுத்தான் என்னிடம் இப்பொழுது இருக்கின்றது.

"காற்று நண்பனே! எனது இறுதி மூச்சையும் எனது உறவுகளின் மூச்சுக் காட்டுக்குள் இறக்கிவிடு..."

மர நண்பனே... விழிதிறக்கப்படாத, காதுகளும் வாயும் அடைபட்ட உனது கிளையில் செதுக்கிய என் முகத்தை, உனது இலைகளால் ஒரு தடவை வருடு..."

நண்பர்களே... நன்றி!

- யுகமாயினி - 2010

# மரத்தில் தொங்கும் பாம்பு

இருளை கரைக்கும் முனைப்புடன் மழை பெய்து கொண்டிருந்தது. இருளின் கருமை செறிந்து கொண்டிருப்பது தெரியாமலேயே மழை வேகத்தை அதிகரித்துக் கொண்டிருந்தது. இருளும் மழையும் நட்புடன் இருப்பதான வெளித்தோற்றம் எங்கும் பரவிக் கொண்டிருந்தது. கனத்த இருளையும் மழையின் சேகரத்தினையும் பார்த்து உயிரை சுமந்திருந்த அனைத்தும் தங்கள் கூடு களுக்குள், ஒளிந்து கொண்டிருந்தன.

மழை ஓயத் தொடங்கியதும் கத்தும் யோசனையுடன் சில வண்டுகள் காத் திருந்தன. நிலத்தின் திடத்தினை கரைக்கும் சுவடுகள் நான் படுத்திருக்கும் நிலத்திலும் தெரியத் தொடங்கி விட்டன. கைகளால் நிலத் தினை தொட்டுப் பார்த்தேன். நிலத்தின் ஈரம் நடுக்கத்துடன் கைகளுக்குள் இறங்கியது.

அருகில் நீலப் பாயில் படுத்திருக்கும் அவளைப் பார்கிறேன். தலை முடிகள் ஒட்ட

வெட்டப்பட்டிருந்தது, முகத்தில் அவளின் இயல்புகளின் சாவைக் காண முடிந்தது. கண் இமைக்குள் மூடுண்டு தூக்கத்தின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டிருக்கும் இரு கண்களிலும் பயத்தின் முளைகளுக்கான வாசத்தினை முகர்ந்து கொள்ள முடிகிறது. ஓடுவதற்கானதும் ஒளிவதற்கானதும் அருட்டுணர்வுகளால் களைத்துப் போன குரல்களைப் பரிவுடன் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன் அவளின் முகத்தில் ஒரு சிரிப்பு நெளியாதா என்ற ஏக்கம் நினைக்கப்பட முடியாத எல்லா வேளைகளிலும் என் உணர்வின்றி எனக்குள் வந்து போகின்றன.

மழையின் இரைச்சலைக் கடந்து தூரத்தே கேட்கும் வாகன இயந்திரத்தின் ஒலிக்காய் என் காதுகள் விழிப்பாய் காத்திருக்கின்றன. காதிற்குள் ஒரு துடிப்பின் ஒலி கேட்டது.

"அயர்ந்து போனேனோ?"

மிக வெகமாக விரைந்து வருகின்ற அந்த வாகனத்தின் ஒலியால் எல்லாக் கூடுகளும் விழித்து விட்டன. வாகனம் நிற்கின்ற ஒலி கேட்டதும் அவளைத் திரும்பிப் பார்த்தேன். பாய் வெறுமையாய் இருந்தது. அடிக்கடி நடைபெறும் இச்சடங்குகளினால் நன்கு பழக்கப்பட்டு போனாள். முட்கம்பிக்குள் ஓய்ந்திருக்கும் நிலத்துள், தன் ஒளிர்வுக்காய் காத்திருக்கும் ஒரு சிறு வாஞ்சைப் புள்ளியை நோக்கி அவள் பறந்து விட்டிருந்தாள். பதின்மூன்று வயதினில் தனது இருப்பினை தெளிவாக மனதினுள் வாங்கி இருந்தாள். தப்பிப் பிழைத்திருக்கும் என் ஒரே மகள்.

நான் பதில்களை தயார்படுத்திக் காத்திருக்கிறேன். அவர்களின் வருகைக்காய் நிலத்தின் ஈரம் கால்களுக்குள் ஏறத் தொடங்குகிறது.

நான் வெளியே எழுந்து இருள் குழைந்த மழைக்குள் நடக்கத் தொடங்குகிறேன். இருளும் மழையும் களைப்பை உணராமல் தொடர்ந்தும் அப்படியேதான் இருந்தன. நெருக்கமாய் அடுக்கப்பட்டிருந்த கூடுகள் மழையில் குளித்துக் கொண்டிருந்தன.

நான் நடந்து கொண்டிருக்கின்ற போது எனது கண்களில் இருந்து வழிகின்ற கண்ணீரையும் மழை உறிஞ்சிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு கூடுகளிலும் பெருகுகின்ற கண்ணீர்த்துளிகளை யெல்லாம் மழை தன் தாகத்திற்கானதாக்கிக் கொண்டிருக்கிறது. கால்கள் புதையும் சேறாய் நிலம் ஆகிக் கொண்டிருக்க அவ்வழியே நிதானமற்று நடந்து கொண்டிருக்கிறேன். தடுமாறி விழிக்கின்ற பொழுதுகளில் எல்லாம் நீண்டு, தொலைவு நோக்கி ஓடுகின்ற முட்கம்பிகளைப் பற்றியே எழுந்து கொள்கிறேன்.

கைகளில் பெருகும் வலிகளையும் உதடுகள் முனகும் வார்த்தைகளையும் உயிர் பிரிந்து வரும் குருதியையும் சுற்றி வளைத்து முட்கம்பி தனக்குள்ளே இழுத்துக் கொள்கிறது. ஒவ்வொரு கூடுகளிலிருந்தும் முனகலாய் வரும் வேதனைகள் எல்லாம் முட்கம்பியினுள் மோதுப்பட்டு உடல் கிழிந்து விம்முகிறது.

கண்களும் காதுகளும் மரத்துப் போன நிலையில் அதனையே வெறித்துப் பார்த்தபடி இருக்கிறேன். முட்கம்பியின் முனைகளில் இருந்து இரத்தம் கொட்டிக் கொண்டே இருக்கிறது.

சேற்றுள் தேங்கும் மழை நீர் மண்ணைக் கரைத்தபடி நெளிந்து ஓடுகிறது. மனத்தின் பாரத்தின் சுமையையும் அதன் கதறலையும் தாங்க முடியாமலேயே நடந்து கொண்டிருந்த எனது கால்கள் ஒரு மரத்தின் அடியில் தளர்ந்து கொள்கின்றன. அப்படியே அமர்ந்து கொள்கிறேன். எனக்கான பொழுதுகளைப் பற்றி என்னால் எப்பொழுதுமே சிந்திக்க முடிவதில்லை. எனது மகளின் திரும்பி வருகையைப் பற்றி எதிர்பார்புகள் கூட இனிவரும் பொழுதுகளில் என்னிடம் இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சம் எனது எண்ணங்களின் எல்லா முனைகளையும் தின்று கொண்டிருக் கின்றன. எனது கண்களுக்குள் அடிக்கடி வந்து சிறைப்பட்டு, கண்களைக் காயப்படுத்துகின்றது; எனது மகனின் ஏக்கம் வழியும் விழிகள் இரண்டும்.

கால்கள் இரண்டும் அறுந்துபோன நிலையில் குருதிச்

*சேற்றுக்குள் கைகளை அடித்தபடி அவன் பார்த்த பார்வை...*

*உயிர் மண்ணுள் இறைந்து போகிறதே என்ற அவலத்தில்...*

*"மறந்த போ" அதட்டிக் கொள்கிறேன்.*

*மறந்துபோகிற எண்ணத்தில் வந்த அதட்டல் இல்லை அது. தாங்க முடியாத வேதனையின் வெடிப்பில் வந்தது அது. நிலத்தில் நீருடன் உழன்று சேறாகிப்போன மண்ணைக் கைவிரல்களால் பினைகிறேன். விரல்கள் நோவெடுத்துக் கதற முற்படும் வரை என் உணர்வுகளின் கொந்தளிப்பு அடங்கவில்லை.*

*மழை சற்று ஓய முற்படுகின்ற வேளையில் தவளைகளின் அவலக்குரல்கள் கேட்கத் தொடங்கிவிட்டன. மூலை முடுக்குகளி லிருந்தெல்லாம் முளைத்துப் பெருகிக் கொண்டிருக்கும் அவற்றின் காதறையும் சத்தங்கள் என்னைச் சுற்றி அலைந்து கொண்டிருக்க, அவற்றினை எனது வெற்றுக் கைகளால் விரட்ட முனைகிறேன். கைகள் சோர்ந்து எனக்கானதும் உனக்கானதுமான வெளியினை உசுப்பும் முனைப்பைத் தவறவிட்டுத் தளர்ந்து விழுகின்றன.*

*சோர்வும் இயலாமையும் தமது முழுப்பாரத்தினையும் என்மீது அழுத்திக் கொண்டிருக்க, வகையின்றி இயலாமையில் வெளிப்படும் கண்ணீரின் சுதந்திரத்துடன் மரத்தின் வேரில் சாய்ந்த படியேயிருந்தேன்.*

*மழை மெதுவாக சொட்டுப் போட்டுக் கொண்டிருந்தது. எனது துடிப்புகள் கேலி செய்யப்படும் உணர்வில் சுருங்கிக் கொண்டன.*

*நீண்ட நெடும் பொழுதுகள் கடந்ததோ?*

*முடிவற்ற மௌனப்பெருவெளி உடைவு கண்டதென திடுக் கிட்டு விழித்தேன், உணர்வுகள் சுய உருவுப்பெறும் கணங்களைக் கண்டு கொண்டேன்.*

*மேலிருந்து ஒற்றை நீர்தாரையொன்று எனது தலையில் ஓடிக் கொண்டிருப்பதைப் பார்கிறேன்.*

*மன்னிக்கவும்!*

"உணருகிறேன்" என்று என்னால் சொல்ல முடியவில்லை. ஏனெனில் உடலும் உணர்வும் என்னில் புறமாகக் கட்டப்பட்டிருக் கிறது என்பதை சில பொழுதுகளில் நன்கு உணரும் தகுதியினைப் பெற்றிருக்கிறேன்.

மரத்தின் கிளையினை உற்றுப் பார்க்கிறேன். கருமையாய்ச் சுருண்டிருந்தது பாம்பொன்று. அது என் மீது மூத்திரம் பெய்து கொண்டிருப்பதை நாகரிமற்றவளாக எதுவித சலனமுமின்றிப் பார்த்துக்கொண்டேயிருக்கிறேன்.

## என்னைப்பற்றிய பிற்குறிப்பு

இதமான எண்ணங்களின் அரவணைப்பில் சுருண்டிருந்ததுமனது. உடலது உணர்வுத்துளிகளில் ஒருவிதமான இன்பத்தேறல் துளிகளாய்ச் சொட்டிக் கொண்டிருந்தன. எனது ஒவ்வொருஅசைவும் மோகத்தின் மயக்கந்தரும் மகரந்தத்தின் வாசனையின் ஆக்கிரமிப்பினைஆவலுடன் எதிர்பார்த்து துடித்துக் கொண்டிருந்தது. அவளின் அன்புபொலியும் அழகுமுகம் என்னருகே என்னையேபார்த்தபடி...

நான் உணர்வுகளில் சரணடைந்து, என்னிலை மறந்து அவள் முகத்தினை நெருங்கினேன்.

ஒளிச் சிதறலுடன் வெடித்துச் சிதறியது காற்று.

என்கண்கள் இருளையே கண்டன. ஒளியைப் பார்க்க முனையும் போது சிதறிய உயிரின் துகள்களில் என்முகங்களே பலவாய்த் தெரிந்தன.

நினைவுகளின் அடுக்குகளில் வெடிக்கும் உண்மையின் கனவாயே இது எனக்குள் சேகரமாகிக் கொண்டிருக்கின்றது. மெதுவாக கால இழை படிகிற வாழ்க்கையின் அடுக்குகள் எனக்குள் வாழ்வின் இன்பத்தின் வரிகளை ஒளித்துவைத்தன. என்னால் அவற்றினைத் தேடிக்காண முடியவேயில்லை. இப்போது வாழ்கையின் அடுக்குகள் அடிக்கடி இழை பிரிந்து என் மூச்சுக் காற்றினை கதறவே செய்விக்கின்றன.

*

எனது காற்று வெடித்துச்சிதறிய பொழுதினைக் கடந்த போது, நான் உயிரினைப் பொத்தி வைத்து ஓடத் தொடங்கி யிருந்தேன். மணல்களில் கால்கள் புதைந்தெழும் ஓட்டத்திலும், காற்றின் வாதையிலும் உயிர் தளம்பிக் கொண்டேயிருந்தது.

இப்போதும் தளம்பிக் கொண்டிருக்கின்றது.

எனது உயிருகே சாம்பர் மேடுகளின் சூடு மெதுமெதுவாய்த் தணிந்து கொண்டேயிருக்க, அந்த சாம்பர் பூத்தவெளிகளைக் கிளறிக் கிளறிக் மனது கீழிறங்குகின்றது. கீழிறங்கும் மனத்தின் மூலைகள் ஒவ்வொன்றிலும் என்னசைவின் படங்கள் அனைத்தும் கறுப்பு வெள்ளையாய் தூசி படிந்து போகின்றன.

கீழிறங்கும் மனது பல்லாயிரம் சிலுவைகளில் அறையப்பட்ட வலியையே தேடுகின்றது.

உயிர் பொத்தி ஓடுகின்ற பொழுதுகள் உன்னையும் அவனையும் பின் தொடர்ந்து கொண்டிருந்தன. அந்தப் பொழுது களின் இடுக்குகளில் நானும் தொங்கிக் கொண்டிருந்தேன். காற்றின் கதறலில் பயந்த பொழுதுகளில் அள்ளுண்ட என் நண்பன் தனது கைகளால் மணல் பறித்து என்னையும் தன்னுடன் அதற்குள் நுழைத்துக் கொண்டான். காற்று அவனின் கதறலை மட்டும் தன்னுடன் இழுத்தோடியது. அக்குழியின் வாசல் திறக்கும் நினைவுகளில் அவனது முகம் மிக நெருக்கமாக தன் கனவுகள் தூர்ந்துபோன கண்களால் என்னை அழைத்துச்செல்லும்.

வாழ்க்கையின் வேர்கள் மறைந்திருந்து வேடிக்கை பார்க்க, மனதில் ஆணியடிக்கப்பட்ட வலி தரும் கண்ணீரில் நனைந்து கொள்கின்றது – என் கீழிறங்கும் மனது.

*

இயல்புலகம் இதுவெனச்சொன்ன இடம்,நான் வெளி வருகின்ற போது பலவீனப்பட்டிருந்த மனதினையும் உடலினையும் உறவுகளின் இயல்பிலும் மாசற்ற அன்பிலும் போக்குவதற்கு முனைந்தேன். எனினும் வீட்டில் முடங்கியிருக்கும் போது முகட்டில் தொங்கும் அந்தரத்தின் அரவணைப்பே என்னைத் தன்னுடன் உச்சி முகர்ந்து அணைத்துக் கொள்கிறது.

அப்பா நெல் விதைத்த வயல் என்னைஅடிக்கடி அழைத்துக் கொள்ளும். அதன் மாறா இயல்பின் மடிகள் நீள நடக்கின்ற போதும், வயலின் நுனியிலுள்ள பனங்கூடலில் அமர்ந்து என்னைக் கரைத்தபோதும் நெருங்கி நின்று என் வலிநீவித் தடவ, காற்றும் தயங்கி ஒதுங்கியது. அந்த சுடலைக்கருகே இருக்கும் தாமரைக் குளமும் அதனருகே ஒற்றையாய் நிற்கும் சிறுபற்றையும் நான் ஒதுங்கிப் படுக்க சலனமற்றிருந்தன.

உடலின் வலு, வடுவாகஉறைந்தபோதும் மனதின் வலி இன்னமும் இரத்தத்தினை கசியவே வைக்கின்றது.

என்னுயிரின் வெறுமையினை நான் என்னிலிருந்து தூக்கி வைக்கப் பிரயத்தனப்படவேயில்லை.

ஒளிச்சிதறலுடன் காற்று இப்போதும் எனக்குள் வெடித்துச் சிதறுகின்றது. என்னைக் கடந்து போகும் காலத்துடன் சேர்ந்து நகரவே முடியவில்லை. காலம் என்னை மட்டும் தனியே விட்டுப் போவதை வேடிக்கை பார்ப்பதற்கே முயற்சிக்கின்றேன்.

அப்பாவும் அம்மாவும் என்னைச் சிறுபிள்ளைபோல அவதானத்துடனேயே கவனிக்கின்றார்கள். முதிரும் பருவத்திலும் அவர்கள் முன் குழந்தையாய்த் தளர் நடையிடுகின்றது என் மனது. வெறும் சேதியாய் அவர்கள் என்னைக் கேள்விப்படுவதற்கு பதில்

நானாக அவர்களிடம் நான் இருப்பதில் கண்ணீர் வழியும் திருப்தி அவர்களுக்கு.

உலகம் தன்னியல்பில் அசைகின்றது!?

நான் அதனை புரிந்து கொள்ள முனையவில்லை. நான் என்னைப் பிரித்துப் பார்க்கும் முயற்சியில் இறங்கினேன். என்னிலிருந்துநான் வேறுபட்டுக் கொள்வதற்கும் காலத்தின் வரிகளையும் அது தந்த வலிகளையும் அழித்துவிட முடியுமா?

பொழுதுகள் தம்மியல்பை மறந்து விடுகின்றன.

அது வெறுமனே அனைத்தையும் காவிச்செல்லும் வண்டியாகவே ஓடிக்கொண்டிருக்கின்றது.

எழுதிவிடும் வரிகளை அழித்துவிடும் வெறுங்கதையாய் ஒருவரின் வாழ்வும் இங்கு இருந்துவிடவில்லை.

ஒளித்து வைக்கவே முடியும்.

ஒளித்து வைப்பதற்கான இடத்தினை எங்கு போய் நான் தேடுவது..?

ஒருவிடயம் எனக்குப் புரிவதேயில்லை.

இரவிலா பகலிலா ஒளிப்பது சிறந்தது?

எந்தக்காலக் கண்களில் மயக்கம் அதிகம்?

இருளைப்பற்றி நான் பேசுகின்ற பொழுதுகளில் இவனைப் பயம் முற்றாக தின்று விட்டது என்கிறார்கள். எனது வலிகளைச் சொல்லி அழுகின்றபோது விளங்காத தத்துவத்துள் சரிந்து விட்டான் என்கிறார்கள்.

இரவிலும் பகலிலும் பார்த்துகொண்டேயிருக்கின்றார்கள்.

என்னை ஒரு அடையாளத்துடன் காணவே எல்லோரும் ஆசைப்படுகின்றார்கள். உண்மையில் அடையாளங்களைத் துறக்கும் ஒருநிலையே எனக்குத் தேவையானது.

என்னிலிருந்து நான் விலகிக்கொள்வதன் தேவை வலுப் பட்டுக் கொண்டேயிருக்கின்றது. என்னுடன் நான் சேர்ந்திருக்கும் பொழுதுகளில் நான் ஆயுள் பலத்தினை இழந்துவிடுவேன் என

சாத்திரிகள் கண்களை மூடியபடியே கூறினார்கள். அதற்கான குணங்குறிகள் பலதினையும் ஊரிலுள்ள குறிசொல்லிகள் அம்மாவிடம் சொல்லி சேர்ந்தழுதனர்.

சாத்திரக் குறிப்புகளும் குறிசொல்லிகளின் அருட்டல்களும் அம்மாவின் கண்ணீருடன் சேர்ந்து என்னை விரட்டி வந்து கொண்டேயிருக்கின்றது. இங்கு கால இழை படிகின்ற வாழ்க்கையின் அடுக்குகள் அடிக்கடி இழை பிரிந்து என் மூச்சுக்காற்றினைக் கதறவே செய்விக்கின்றன.

விழிகள் மயங்குகின்ற பொழுதொன்றில் வெறித்திருந்த வெளியொன்றில் நான் நடந்து கொண்டேயிருந்தேன் என்னுடன். எங்கும் வெம்மை ஏறிக்கொண்டிருப்பதை ஒதுங்கியிருந்த ஓரிரண்டு மரங்களும் அசைவற்றுப் பார்த்திருந்தன.

நான் நீள நடந்து கொண்டேயிருந்தேன்.

இருள் கனத்துப் படுத்திருந்த அந்த சரிவில் இறங்கி சிறு பற்றைக் கருகில் அமர்ந்துகொண்டேன். வியர்வை ஓடிக் கொண்டேயிருந்தது. நனைந்த சேட்டின் தெறிகளை கழற்றிவிட்டுக் கொண்டேன்.

மூச்சு இரைத்தது.

மல்லாக்காகப் படுத்துக் கொண்டேன். வானில் நட்சத்திரங்களும் ஒளித்து விட்டிருந்தன. நேரம் நீண்டு கொண்டேயிருந்தது. சடாரென எழுந்தமர்ந்தேன். வண்டுகள் கதறிக் கொண்டிருந்தன.

சுற்றும் முற்றும் பார்த்தேன் கதறலை நிறுத்திக்கொண்டன. தவளைகள் மட்டும் விட்டுவிட்டுக் குரல் கொடுத்தன. அருகிலுள்ள தாமரைக்குளத்தின் நெடியினை இப்போதுஉணரமுடிந்தது.

சிந்தனைகளை ஒதுக்கி பற்றையின் அடியில் மணலை கைகளால் வாரத் தொடங்கினேன். சாம்பர் பூத்தமணலைக் கிளறிக் கிளறிக் கைகள் கீழிறங்க மனதும் உடனிறங்குகிறது. கைகள் ஆழத்தைத் தேடியிறங்க மனது மட்டும் பல்லாயிரம் சிலுவைகளில் அறையப்பட்ட வலியைத் தேடுகின்றது. கண்ணீரில் மனது தோய்ந்து கொள்கின்றது.

களைத்துப் போய்ச் சற்றே அமர்ந்திருந்தேன். உடல் முழுவதும் வியர்வையில் தோய்ந்திருந்தது. சாரத்தின் ஓரத்தினைத் தூக்கி முகத்தினை அழுத்தமாய் துடைத்துக்கொண்டேன்.

பின் எழுந்து குளத்தினை நோக்கிச் சென்றேன். நீர் குளிர்மையற்று சூடாயிருந்தது. கைகளால் நீரை அள்ளியள்ளி வாய்க்குள் விட்டேன். சூடு உடலுக்குள் நேர் கோடாய் இறங்குவதை உணர முடிந்தது. வயிறுநிறையும் வரையா மனது நிறையும் வரையா குடித்தேன்?

... நினைக்கவில்லை.

மீண்டும் பற்றையடியில் தோண்டத் தொடங்கினேன். தோண்டிமுடிந்ததும் சேட்டினைக் கழற்றி வைத்து விட்டு ஆசுவாச மாய் அமர்ந்துகொண்டேன். இருட்டில் சுற்றிவர இருப்பவை யனைத்தும் என்னையே பார்ப்பதான பிரமையில் திடுக்கிட்டு எழுந்த மர்ந்தேன். காற்றின் அருகாமை எனக்குத் தேவையாயிருந்தது. ஆழ மூச்சினைஉள்ளிளுத்தேன். காற்றினை யாரோ கட்டி வைத்து விட்டனர். தவளைகளும் காணாமலேபோயிருந்தன.

நான் என்னைமெதுவாகஅந்தக்கிடங்கினுள் வைத்து அழுத்தினேன். சாதாரணமான ஒரு பொருளை வைத்து மூடுவது போன்று மிக இலகுவாக இருக்குமென்று நான் நினைக்கவே யில்லை. மண்ணில் மறைந்திருந்து வேடிக்கை பார்த்த வேர் முனை கள் என்னை இறுக்கமாகப் பற்றிக் கொண்டன. என் மூச்சுக்காற்று ஒரு கணம்பதறித்துடித்தது.

நான் கிடங்கினை மூடி விட்டுஎழுந்துகொண்டேன்.

நினைவின் அடுக்குகளில் வெடிக்குமந்த உண்மையின் கனவாயே இதுவும் எனக்குள் சேகரமாகிக் கொண்டிருந்தது. இப்பொழுது காற்றுவெடித்துச் சிதறுகின்ற பொழுதுகளை நான் கலக்கமற்றுக் கடந்து கொண்டிருக்கிறேன். காற்றின் குளுமையை யும் உணரமுடிகின்றது.

- தவிர. காலநதி தொகுப்பு

2014

# அணங்கு

வெயிலின் சூடு எங்கும் விரிந்து கொண்டிருந்தது.

அடுக்கடுக்காய் எல்லாவெளிகளிலும் தன்னை விரித்து ஒவ்வொரு இடுக்குகளிலும் நுழைந்து கொள்கிறது.

கீழே மணலில் வெயிலின் சூட்டு முட்கள் முளைத்துக் கொண்டேயிருந்தன.

விழித்திருக்கும் கால்கள் தன்னிச்சை யாகவே ஒதுங்கிக் கொள்கின்றன. காட்டின் புறவெட்டையில் எஞ்சியிருந்த நான்கு மரங் களும் தம்மசைவைத் தொலைத்து வெயிலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

எச்சிறு உயிருக்கும் தைரியமில்லை. சூட்டின் முனைகளில் நிழல் கண்டு எங்கேயோ ஒளிந்து கொண்டன.

தலைகளைப் புதைத்துக் கொண்டன.

தொலைவைப் பார்க்கும் விழிகள் கானலில் கூசிக் கொள்ளும். ஆனால் எந்த விழிகளையுமே பார்க்க முடியவில்லை.

இரண்டு வெறித்த விழிகள் மட்டும் எங்கேயோ இருப்பதான உணர்வு மட்டும் அந்த வெளியில் தோற்றங்காட்டிக் கொண்டிருந்தது.

அவனுக்கு மயக்கமாயிருந்தது. தீய்ந்த – தீய்ந்து கொண்டிருக்கும் வெளியும் அதன் நுனியில் தொற்றியிருந்த காடும் அவனது கால்களை இழுத்தபடியிருந்தன.

அவனுக்குப் பழக்கமான இடம்தான்.

நான்கு வருடங்களுக்கு முன் அவனது கால்கள் உழக்கிய நிலம்.

தயக்கத்தை உதறினான். வலது காலால் நிலத்தில் ஒருமுறை உதைத்துக் கொண்டான்.

மெதுவாக நடக்கத் தொடங்கினான். ஏதோ யோசித்து சட்டென நின்றவன், தனது மணிக்கூட்டை அவசரமாகப் பார்த்துக் கொண்டான்.

பன்னிரண்டுக்கு ஓரிரு நிமிடங்கள் முன்னதாக அல்லது பின்னதாக இருக்கலாம். அவனால் நிதானமாகப் பார்க்க முடியவில்லை.

வியர்வை உடலிலிருந்து சூடாக வழிந்து கொண்டேயிருந்தது. விரைவாக நடக்கத் தொடங்கினான்.

தன்மேல் விழுந்து கொண்டிருந்த வெயிலை தம்மால் இயன்றமுறையில் அங்கிருந்த மணல் துப்பிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே கிழிந்து சிதறியிருந்த தகரத்துண்டுகளும் வெயிலின் கொதியால் மல்லாந்து அலங்கோலமாகயிருந்தன.

அவன் அந்தச் சிறுகாட்டின் தலைப்பை நெருங்கியிருந்தான். சிறுபற்றைகளால் தொடங்கி பெருமரங்களால் அடர்ந்த நீண்ட சிறுகாடு என அதைச் சொல்ல முடியும். காட்டின் வாசலிலுள்ள அடர்த்தியற்ற இருள் இங்கும் உலவுவதற்கான சந்தடிகள் தெரிந்தன.

கால்கள் வெயில் முடிவடையும் இடத்திலேயே நிலைத்து நின்றுவிட்டன. இரண்டடிகள் முன்னேயிருந்த நிழலில் ஒதுங்கி நிற்க வேண்டுமென்ற எண்ணமேயின்றி விறைத்த விழிகளால் அந்தக் காட்டையே வெறித்துப் பார்த்தபடியிருந்தான்.

அவனிலிருந்து வியர்வை விறைப்பற்று இறங்கிக் கொண்டே யிருந்தது. உதடுகள் காய்ந்து நா வறண்டிருந்தது. நாக்கு உதடுகளை ஈரப்படுத்தும் சலனமற்று உள்ளடங்கியிருந்தது.

அவனுக்கு மிகத் தாகமாயிருந்தது.

தான் வைத்திருந்த தண்ணீர்ப்போத்தலை எடுத்தான். அவசரஅவசரமாக மூடியைத் திறந்தவன். தண்ணீரை நிலத்தில் ஊற்றினான்.

இந்த நிலத்தில் வைத்துதான் அவள் தண்ணீர் கேட்டாள். கண்கள் அரைமயக்கத்தில் மூடியிருக்க முகத்தில் வலிகள் வலையாய்ப் போர்த்தியிருந்தன. வாய் மட்டும் "தண்ணீர்... தண்ணீர்..." என முனகியபடியிருந்தது.

உடலும் மனமும் வெறி கொண்டிருக்க அவனால் அவளை, அவளது முகத்தை அவளது வலியை அவளது இரத்தத்தை முனகலை கண்டு கொள்ள முடியவேயில்லை.

தண்ணீர் முழுவதையும் ஊற்றியிருந்தான்.

வெம்மையில் காய்ந்திருந்த நிலம் தண்ணீரை உள்ளிழுத் திருந்தது.

போத்தலிலிருந்து துளிகளும் விழுந்து முடிந்திருந்தன. போத்தல் அவனது கையிலிருந்து நழுவிக் கீழே விழ மிக மெது வாய்க் காட்டுக்குள் நுழைந்தான்.

செடிகளும் கொடிகளும் தட்டத்தட்ட உணர்வின்றி உள் நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

இடிந்து கருப்பேறிய, அரையாள் அளவு உயரத்தில் சீரற்று உடைந்திருந்த கட்டடத்தினை அடைந்து விட்டிருந்தான்.

ஆங்காங்கே கிண்டுப்பட்டு, கற்கள் பெயர்ந்து, செடிகளும் புற்களும் முளைவிட்டிருந்த கட்டடத்தின் தரையில் அமர்ந்தான்.

இன்னமும் அவனது கண்கள் வெறித்தபடியேதானிருந்தன.

அவளது கண்களும் வெறித்தபடி அவனைத்தான் பார்த்திருந்தன. உயிரற்ற கண்களின் பார்வையில் உறைந்திருந்த பயமும், இரந்த கும்பிடும் அவனது இரக்கந் தொலைந்த கண்களுக்குத் தட்டுப்படவேயில்லை.

இந்தச் சிறுகாட்டுக் கண்கள் அவளுடையவைதான் என்பதில் அவனுக்குச் சந்தேகமேயில்லை. அந்த இரண்டு வெறித்த விழிகள் அவனைத்தான் பார்க்கின்றன. அவை உயிரற்ற கண்களா? இல்லவேயில்லை. ஒரு பயங்கரத்தின் அழைப்பு அதில் கொழுவப்பட்டிருக்கிறது.

மூச்சு முட்டும் நிசப்தம் எங்கும் கொட்டுண்டிருக்கிறது. பயங்கரத்தின் நெடியை அவனால் உணரமுடிந்தது.

அவனால் மூச்செடுக்க முடியவில்லை.

நெஞ்சு படபடத்தது.

வியர்வை இன்னமும் ஓடிக் கொண்டிருந்தது.

வெறித்திருந்த விழிகளை ஒரு கணம் மூடித்திறந்தான். ஒரு அசைவு அவனுக்குள் புலனாகியது.

இல்லை... ஓசையற்ற ஓராயிரம் அசைவுகளாலானது அது.

மிக வெண்மையான நீண்ட தலைமுடி சட்டென்று அவனது கண்களுக்குத் தட்டுப்பட்டது. கொழுத்த வெண் நாகம் போன்ற சடை, பொன்னிழைகளாகக் கட்டப்பட்டிருந்தது. காட்டுப் பன்றியின் வளைந்த கொம்பொன்றினைச் சடையிலே கொழுவியிருந்தாள்.

ஆம் பெண் தான்.

புலிப்பல்லாலான தாலி கழுத்திலே அணிந்திருக்கிறாள். கையில் வில்.

அவனது மூளை பிரமையின் பள்ளத்துள் சறுக்குவதாய்

அவனுக்கு ஓர் நினைப்புத் தோன்றி மறைந்தது.

கையிலே ஒரு பசுங்கிளியும் வைத்திருக்கிறாள்.

கறுப்புநிறப்பெண்; மிகக்கறுப்பு. புன்னகை நெளிகிறது வாயில்.

அவனுக்கு பயமாயிருந்தது.

அவள் நடந்து போகிறாள். பின்னே இருளுருவங்களாய்ப் பல நடந்து போவதான பிரமை அவனை முன்னே உந்தித் தள்ளியது.

அவனும் தன்னுணர்வற்று அவளைத் தொடர்ந்து நடந்தான்.

வெம்மை மாறா நிலத்தின் பெண்ணா இவள்? அவளை நெருங்கிப் போகவே முடியவில்லை. எங்கும் வெம்மை பரவியபடியே இருந்தது. பாதையிலிருந்த செடிகளும் புற்களும் பொசுங்கிக் கொண்டிருந்தன. அவனது உடலின் கணகணப்பு மிக அதிகமா யிருந்தது. வியர்வை ஊற்று நின்று வெம்மையின் துளிகள் உடலில் முளை விட்டிருந்தன.

வெம்மையைத் தாங்க முடியாது அவனது உடல் நடுங்கிக் கொண்டது. உடலின் பதற்றத்தால் அவனது கால்கள் தடுமாறின. விழிகள் செருக மயங்கி விழுந்தான்.

காய்ந்த கிளையொன்று முறிந்து அவன் மீது விழுந்தபோது அவனுக்கு விழிப்பு வந்தது. மிக மெதுவாய் கிளையைத் தூக்கி அப்பால் போட்டான்.

திடீரென பரபரப்புடன் எழுந்தமர்ந்தான்.

வெம்மையின் அகோரம் சற்றுக் குறைந்திருக்கிறது. அந்த இடத்தைச் சுற்று முற்றும் பார்த்தான். ஆலமரம்; ஆற்று நீரோடும் வாய்க்கால்.

நன்றாகத் தெரியும் அவனுக்கு

இந்த இடத்தில்தான் அவளை அவன் புதைத்தான்.

புதைத்த பின்னும் விழிகள் வெறித்தபடியிருந்தன. விரல்கள் புதைய மறுத்தன.

காட்டின் பிரமை பயங்கரத்துடன் அட்டணக்கால் போட்டு அவன் முன்னே அமர்ந்திருக்கிறது. சடாரென்று எழுந்தமர்ந்தான். அங்கு எல்லாமே கிண்டிக் கிளறப்பட்டிருந்தது. அவன் சோர்ந்து போய் அமர்ந்து கொண்டான்.

அவளுக்குச் சற்று தூரத்தில்தான் அதனையும் அவன் புதைத்திருந்தான்.

எல்லாம் போய்விட்டிருந்தது. அவளது உடலையும் காணவில்லை.

சக்தியெல்லாம் வடிந்தது போல் மிகப் பலவீனப் பட்டிருந்தான்.

வெம்மையின் தகிப்பு கணத்துக்குக் கணம் அதிகரிப்பதை மீண்டும் அவனால் உணர முடிந்தது. வெம்மையின் அகோரம் பெருகுகிறது.

கண்கள் மின்னத் தொடங்கின.

வெள்ளைச் சடையுடைய பெண் அதோ நிற்கிறாள்.

இங்கேயும் நிற்கிறாள், அங்கேயும் நிற்கிறாள்.

அவளைச்சுற்றிவர அவளின் தோற்றங்கள் அசைந்து கொண்டிருந்தன. அவளது கழுத்தில் தங்க நகைகள் மின்னுவதை அவனது விழிகள் வெறிக்கப் பார்த்தன. பிரமையின் அடியாழத்தை நோக்கிப் பிடிப்பற்று விழுந்து கொண்டிருந்தான் அவன்.

- 2013

## ஒரே வானம்

பாடசாலைக்கு வெளிக்கிட்ட பின் நண்பன் குமணனின் வருகையை எதிர் பார்த்து விறாந்தைப் படிக்கட்டில் அமர்ந்திருந் தான் அதிசயன். அவனுக்கு அதிசயன் என்று பெயர் வைத்த பெற்றோர்கள் அவனுடனில் லாதது அவனுக்கு எப்போதும் ஆச்சரியம் அளித்ததில்லை. அவனது நண்பர்கள் சிலரும் அவனைப் போலவே இருந்தார்கள். யுத்த நேரத்தில் தாய் இறந்துபோன அந்தக் கணங்கள் இன்னும் கசங்கலற்ற காட்சி களாய் அவனது கண்ணீரில் நனைந்திருக் கின்றன. அந்தக்கணங்களின் ஞாபகத்தை ஏதாவது பெட்டிக்குள் அடைத்து வைத்துவிட முடியுமோ என பல நேரங்களில் அவன் அந்தரப்பட்டதுண்டு.

"அதிக்குட்டி...என்ர குஞ்சுக்குட்டி" அம்மாவின் ஆசை குழைந்த வார்த்தைகள் அவனை எப்போதும் சுற்றிக் கொண்டே யிருக்கின்றன. அந்த வார்த்தைகளுக்குள்

அம்மாவின் இரத்தம் தோய்ந்த முகமும் கூடவே ஒட்டியிருக்கிறது. பல இரவுகள் அவனது கண்ணீரில் நனைந்துபோயின. அவனது அலறல்களில் வெந்து போயின.

அதிசயன் வானத்தையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந் தான். பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. "எந்தப்பயத்தையும் இந்த வான், உந்தப் பறவைகளுக்கு குடுக்கிற தில்லையே சிலநேரம் பயப்படுத்தும்... கடவுளே அப்படி யொண்டும் பயப்படுத்தக் கூடாது... ச்சா என்ன மாதிரி குடும்பம் குடும்பமாய் பறந்து திரியுதுகள்..."

அவனது மனது பறவைகளின் பின்னே ஏக்கத்துடன் அலையத் தொடங்கியது.

"அப்பாவாவது என்னோட இருந்திருக்கலாம்"

என்கிற எண்ணம் அவனுக்குள் அதிகரிக்கத் தொடங்கி யிருந்தது.

"இப்ப விட்டுடுவாங்கள்.."

"இன்னும் கொஞ்சநாளில்..."

என்கிறவார்த்தைகள் அவனது துடிப்பை அதிகரிக்கச் செய்கிறது. அவனது அப்பா உயிருடன் இருக்கிறார் என்கிற நம்பிக்கை அவனுக்குள் ஆழமாக இறங்கி ஒரு ஆசுவாசத்தைத் தந்து கொண்டிருந்தது.

அவசரமாக வீட்டுக்குள் நுழையும் எண்ணம் வந்தாலும் அவனால் அப்படி ஓடிச் செல்ல முடியாது.

அவனது ஒரு காலை முழங்காலுக்கு கீழாக எடுத்திருந் தார்கள். பொய்க்கால் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது.

பொருந்திய இடத்தில் சற்று வலி ஏற்படுவதை அவனால் உணர முடிந்தது.

"நடக்கேக்குள்ள தான் நோகுது" என்று எண்ணிய படி வீட்டுக்குள் மெதுவாக நுழைந்தான். இப்படியான தருணங்களில் அவனுக்குஅம்மாவின் நினைவு வந்து விடும்.

அம்மாவின் படத்தைப் பார்த்தான். படத்துக்குஅவன் வைத்த பூ விழாமல் இருப்பது கண்டு ஒரு திருப்தியான பாவம் முகத்தில் வெளிப்பட்டது. அருகிலிருந்த தங்கையின் புகைப் படத்தைப் பார்த்தான்.

கண்களில் கண்ணீர் கேட்டுக் கேள்வியின்றி வந்தது.

"அம்மாவும் தங்கச்சியும் துணையாய்ப் போட்டினம்..."

அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

அதில் அப்படியே அமர்ந்து சத்தம் போட்டு அழத் தொடங்கினான்.

உள்ளிருந்து அவனது அம்மம்மா ஓடி வந்து அவனை அணைத்தாள்.

"அதிக்குட்டி அழாதையணை..

எங்கட ஐயாவெல்லே... ராசா அழாதையப்பு" அம்மம்மாவுக் கும் கண்களில் நீர் வழிய அவனைத் தேற்றிக் கொண்டிருந் தாள்.

"இஞ்சவா குட்டி...உனக்கொரு விசயம் காட்டுறன்" என்ற படி அதிசயனை அம்மம்மா வீட்டின் பின் புறமுள்ள தோட்டத்திற்கு அழைத்துச் சென்றாள்.

அவன் நட்டிருந்த வாழையின் அடியில், மண்ணைப் பிளந்து கொண்டுபச்சைச்கூராய்குட்டி ஒன்றுவெளிக்கிடத்தொடங்கியிருந்தது.

அதைக்கண்டவுடன் அவனுக்கு மனம் விரிந்துபோனது.

"ஆ... இது என்ர குட்டி...என்ர குட்டி..."

என்று அதிலேயே குந்திக் கொண்டான்.

பின் எழுந்து கிணற்றடியில் நிற்கும் தென்னை மரத்தடிக்கு மெதுவாகப் போனான். சத்தம் போடவில்லை. அம்மம்மாவை அங்கேயே நிற்கும் படி கை காட்டி விட்டு மெதுவாக எட்டிப் பார்த்தான். கட்டையான தென்னைமரத்தின் வட்டுக்குக் கீழாக இருந்த பொந்துள் இரண்டு கிளிகள் தென்பட்டன.

ஒன்று கத்திக் கொண்டிருக்க மற்றது அதனது வாய்க்குள்

எதனையோ கொடுத்துக் கொண்டிருந்தது.

"கத்துறது குஞ்சு....அதுதான் பொந்துக்குள்ள இருக்குது, இவர் வெளியில் நிக்கிறவர் அதின்ர தாயாக இருக்கவேணும். சாப்பாடு தீத்துறார் போலகிடக்கு...தேப்பனாகவும் இருக்கும்... எனத் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இனம் புரியாத ஒரு பரவசம் அவனுக்குள் பரவியது. அதிசயனின் முகம் சிரிப்பில் விகாசித்திருந்தது. மெதுவாக விறாந்தையில் மீண்டும் வந்தமர்ந்தான். அம்மம்மா கொண்டு வந்து தந்த தேநீரை மெதுமெதுவாய்ச் சுவைத்த படி வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வீதியைப் பார்ப்பதில் அவனுக்கு அலாதி விருப்பம். அவன் இருந்த இடத்திலிருந்து வீதி, வேலி மறைப்புகளை மீறித் தெரியும். பாடசாலைக்குப் போகும் மாணவர்களும், வேலைக்குப் போகின்றவர்களும், வேறுகாரியங்களுக்குப் போகின்றவர்களும் இரண்டு திசைகளுக்கும் சென்று கொண்டிருப்பார்கள்.

சைக்கிள்கள் குறுக்கும் மறுக்குமாக ஓடிக் கொண்டிருக் கும். அதேபோல் மோட்டார் சைக்கிள்களும்,வாகனங்களும் புகையைக் கக்கியபடி இப்பொழுதும் ஓடிக் கொண்டிருக்கின்றன.

அவனது வயதையொத்த பிள்ளைகள் பாடசாலைக்கு தனியாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். சிலரைத் தாய்மார் கூட்டிச் செல்கின்றனர்.

வீதி ஓடிக் கொண்டேயிருப்பதைப் போன்ற எண்ணம் அவனுக்குள் ஏற்படுவதுண்டு.

அதைப் பார்ப்பதில் நேரம் போவதே அவனுக்குத் தெரி யாது.

அவனுக்கு எதிரே நீண்ட வீதி எப்போதும் பரபரப்பான ஓய்வற்று அசைந்து கொண்டிருக்கிறது. விரிந்த வானத்தில் பறவைகள் பயமற்றுப் பறந்து கொண்டிருக்கின்றன.

அவன் அமர்ந்தபடியே பார்த்துக் கொண்டு இருக்கிறான்.

தூரத்தில் குமணன் சைக்கிளில் வருவது தெரிந்தது. பெரு மூச்சொன்று அவனுக்குள்ளிருந்து கிளம்ப மெதுவாகத் தூணைப் பிடித்துபடி எழுந்தான்

வெருட்டாத வானத்தின் கீழ் குமணனின் சைக்கிளில் அதிசயன் பாடசாலைக்குப் போய்க் கொண்டிருக்கிறான்.

- சுடர்ஒளி - 2011

# பாம்பின் காலம் மூன்று

பூக்குஞ்சு/73
பூனை/78
வெளிக்கிட்டிட்டன்/84

# பூக்குஞ்சு

நாய்கள் ஒன்றையொன்று துரத்தி ஊளையிட்டு அலைந்தோடும் சத்தம் தூரத்தே மிகக் கருகலாகக் கேட்பது போலிருந்தது. இந்நேரத்திலும் எங்கும் இருள் கொட்டுப் பட்டுக் களியாய்ப் பிசுபிசுக்கும் உணர்வு என் உடல் மீது குந்தியிருந்தது.

கண்களைத் திறக்க முடியவில்லை.

இமைகளை நூல்கொண்டு தைத்தது போன்று வலிகள் பொட்டுப் பொட்டாய்ச் சிதறியிருந்தன. பெரும் பிரயத்தனப்பட்டு ஒட்டி யிருந்த இமைகளைத் திறந்தேன்

வலிகள் தாறுமாறாய் என்மீது ஓடின.

வாய் விட்டுக் கத்த வேண்டும்; ஆனால் இயலவில்லை.

எனக்குள்ளிருந்த ஒலிகளனைத்தும் எப்போதோ வடிந்துவிட்டிருந்தன.

இலையான் ஒன்று தலையைச் சுற்றி இரைந்தபடி பறந்து கொண்டிருந்தது. இலை யானின் இரைச்சல் தலையைக் குடைந்தது. அதன் துணைக்கு இன்னொரு இலையானும்

சேர்ந்து கொண்டது. ஆவேசத்துடன் இரண்டு கைகளாலும் அடித்துத் துரத்த வேண்டுமென்ற வெறி எனக்குள் எழுந்தது. ஆனால் அது முடிகிற காரியமாய்த் தெரியவில்லை. கைகளிரண்டும் சுரணை மறந்து சோர்ந்து கிடந்தன.

எனது சொண்டில் இரண்டு இலையான்களும் கூட்டுச் சேர்ந்து அமர்ந்து கொண்டன. அவை எனது வலிகளை உறிஞ்சி எடுக்கின்றனவா? எவ்வளவு நல்லது!

ஆனால் அவை வலிகளைக் கிண்டிக் கிளறிப் பெருக்கிக் கொண்டிருந்தன. இயலாமல் உடம்பைத் திமிறிக்கொண்டேன். நினைத்ததற்கு மாறாக மிக மெதுவான அசைவே எனது உடலிலிருந்து வெளிப்பட்டது.

இடக்கண்ணை ஏதோவொன்று சுடுவது போன்றிருந்தது. விழித்துப் பார்த்தேன்.

அந்தச் சிறுபற்றையின் இலைகளுக்கூடாக வட்டம் வட்டமாக ஒளிப்பொட்டுகள் என்னை விழுங்க முயன்று கொண்டிருந்தன. சுற்றும் முற்றும் பார்த்தேன்;

அதுவொரு சிறிய அடர்ந்த பற்றை. வெளியே ஒன்றுமே புலப்படவில்லை. மிகத் தூரத்தே தெளிவற்றுச் சில சத்தங்கள் குழம்பலாய்க் கேட்டன.

எனது இரு கால்களும் விரிக்கப்பட்டு இரண்டு மரங்களிலும் கயிறுகளால் கட்டப்பட்டிருந்தது. கட்டப்படாத இடக்கையை அசைக்கவே முடியவில்லை. இந்தக் கையின் பக்கமாகத் திரும்பிப் பார்த்தேன். மிகச் சிரமமாக இருந்தது.

கை நீட்டக்கூடிய தூரத்தில் ஒரு துணியின் மீது அரைவாசி குடிக்கப்பட்ட பெப்சி சோடாவும், உடைக்கப்பட்ட பிஸ்கற் பக்கற் ஒன்றும் வெறும் போத்தலொன்றும் இருந்தன. சற்று எட்டவாக கறுப்பு நிறப்போத்தலொன்று சரிந்து கிடந்தது.

எனது புத்தகப்பையும் புத்தகங்களும் சிதற புழுதி ஒட்டிக் கிடந்தது. கவிழ்ந்து கிடந்த கணிதப் புத்தகத்தில் எட்டு என்ற

இலக்கம் என்னை உற்றுப் பார்த்தது.

அதிலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட பேப்பர்கள் கசக்கப்பட்டு மூன்று பந்துகளாக உருண்டிருந்தன.

எனக்கு மிகப் பயமாயிருந்தது.

"அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே..."

பாரதியாரின் பாட்டு மட்டும் ஏனோ நினைவுகளிலிருந்து வெளிப்பட்டது.

உதடுகள் உச்சரிக்க முயன்று அசைய முயன்றன. முடியவில்லை.

இடது கையைச் சிரமப்பட்டு உதட்டுக்குக் கொண்டு வந்தேன்.

கீழ்ச்சொண்டை விரல்களால் தடவிப் பார்த்தேன். காய்ந்து ஒட்டியிருந்த இரத்தத்தின்மீது விரல்கள் தங்கின.

"ஐயோ... அம்மா..."

என்னையறியாமல் வாய் முனகியது.

ஏதோ சரசரப்பு ஒன்றை பற்றையின் வெளிப்புறமாகக் கேட்க முடிந்தது. அருகிருந்த பயம் என்னைக் கெட்டியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டது.

அந்தச் சரசரப்புடன் இழைக்கின்ற மூச்சின் சப்தம்.

நாயொன்று என்னருகே நெருங்கியது. அதனுடைய தொங்கிய நாக்கிலிருந்து வீணீர் வழிந்து கொண்டிருந்தது. கண்களில் கிழித்தெறிகிற வெறி தெரிந்தது.

குமாரண்ணையின் முகத்தில் தெரிந்த அதே வெறி.

என் முகத்தை நெருங்கிய விகாரித்த அவரின் முகத்திலும் முகத்தைச் சுழிக்க வைக்கும் மணத்திலும் இந்தப் பயங்கரத்தை அடையாளங்காண முடிந்தது.

குமாரண்ணை எங்கள் பக்கத்து வீட்டில் இருப்பவர். அவருக்கு ஒரு சின்னக் குழந்தையும் இருக்கிறது. குழந்தையைப்

பார்க்கிற எல்லோரும்,

"ச்சா... என்ன அழகான பட்டுப்போல அழகான பெண் குழந்தை" எனச் சொல்வார்கள்.

எனக்கும் அந்தக் குழந்தையை நன்றாகப் பிடிக்கும். என்னைக் கண்டதும் கன்னங்குழிய பூப்போலச் சிரிக்கும்.

"நல்ல ஒரு பூக்குஞ்சு அது" என நினைத்துக் கொண்டேன்

"பூக்குஞ்சு" என்று தான் அந்தக் குழந்தையைக் கொஞ்சுவேன். குமாரண்ணையும் ஒருவரும் இல்லாத நேரங்களில் என்னைக் கட்டிப்பிடித்து "வடிவுக்குஞ்சு" எனக் கொஞ்சுவார். ரொபி, கன்டோஸ் எல்லாம் வாங்கித் தருவார். ஆனால் அந்த நேரங்களில் குமாரண்ணையின் முகம் இவ்வளவு விகாரமாய்த் தெரிந்ததில்லை.

ரியூசன் முடிந்து நான் நடந்து வந்து கொண்டிருந்த போது சைக்கிளில் வந்த குமாரண்ணையைக் கண்டேன். என்னைக் கண்டதும் தனது சைக்கிளை நிறுத்தி, அதில் என்னை ஏற்றிக் கொண்டார்.

குமாரண்ணையின் வாயிலும் இந்த நாய்க்கு இருக்கிற மாதிரி பெரிய பற்கள் சின்னக் கத்தி போல் இருக்கத்தான் வேணும். எனது நெஞ்சுச் சட்டைப்பகுதி கிழிபட்டுக்காயம்பட்ட மார்புக் காம்புகள் தெரிந்தன. இலையான் ஒன்று அதில் என் இரத்தத்தைத் தேடி அந்தரப்பட்டு பறந்து திரிந்தது.

எனது இடுப்புக்குக் கீழே உடையைக் காணவில்லை. என்னால் தலையுயர்த்தியும் பார்க்க முடியவில்லை. ஏதோ பெரிய பாறாங்கல்லைக் கட்டி வைத்தது போன்ற பிரமை, எனது இடுப்புக்குக் கீழே படுத்திருந்தது.

மிக நீண்ட நேரமாக இப்படியே படுத்திருக்கிறேன். குமாரண்ணைக்கு என்னுடைய கெஞ்சலும் அழுகையும் கொஞ்சங் கூட கேட்கவில்லை.

"அவருடைய பூக்குஞ்சு வீறிட்டழுதால் குமாரண்ணை என்ன செய்வார்...?

...கடவுளே குழந்தை பாவம் இப்பிடி அழக்கூடாது"

நினைக்க நினைக்க என் கண்கள் உடைப்பெடுத்தன.

அம்மாவும் அப்பாவும் என்னைக் காணாது தேடிக் கொண்டிருப்பார்கள்.

நான் இங்குதான் இருக்கிறேன் என யாராவது சொல்வார்களா?

அந்த நாய் என்னைச் சுற்றிச்சுற்றி முகர்ந்து பார்த்துவிட்டு, குரைத்தபடி வெளியே பாய்ந்தோடியது. எனக்குத் தலைசுற்றி மயக்கம் வருவது போன்றிருந்தது. ஏதோவொரு பயம் திடீரென வந்து அப்பிக் கொண்டது. தூரத்தே இரண்டொருவரின் பேச்சுக்குரலும் நாயின் குரைப்பும் கேட்டது. அது பற்றையை நெருங்குவதை என்னால் உணர முடிந்தது.

கண்களில் நீர் வழிந்தது; உணர்வுகள் தறிகெட்டுச் சுழன்றோடியது. மயக்கம் என்மீது ஊர்ந்தேறுகிறது. நினைவுகளின் மயக்கத்தில்; அம்மாவும் அப்பாவும் பூக்குஞ்சு என என்னை அள்ளிக் கொஞ்சினார்கள்.

குமாரண்ணையும் தனது பூக்குஞ்சை அள்ளிக் கொஞ்சினார். பூக்குஞ்சுகளாய் இருப்பதன் துன்பம் கொடியது.

பாரதியாரின் அக்கினிக்குஞ்சு மாதிரி இருந்தால் எவ்வளவு நல்லது. எந்தக் காட்டிலும் எந்தப் பொந்திலும் கொண்டு போய் ஒளித்து வைக்க முடியும்?

அந்தக் காடு வெந்து தணிந்தது போல்; இங்கு இந்தச் சிறு பற்றையும் குமாரண்ணையும் மாதிரி வீணீர் வழிய பயங்கரமான நாய் முகத்தை தங்களுக்குள் ஒளித்து வைத்திருக்கிற எல்லோரும்...

...ஓம் எல்லோரும்...

உன்மத்தம் கொண்டு மயக்க வெறியேறிய என் நினைவுகள் தறிகெட்டோடித் தடுமாறின; முற்று முழுதாய் மயங்கிப் போயின.

- 24.06.2013

# பூனை

என் அக்காவின் மகள் தங்களுடைய வீட்டிலிருந்து வவுனியா பஸ் நிலையத்துக்கு என்னை ஆட்டோவில் கூட்டிக் கொண்டு வந்தாள். எழுபத்தைந்து வயசுக் கிழவனோடு சினக்காமல் சீறாமல் மிக ஆறுதலாகவும் ஆதரவாகவும் கதைக்கும் பக்குவம் அவளுக்கு இருக்கிறது. எனக்கு அவளை நினைக்க ஆச்சரியமாக இருந்தது. ஒரு இருபத்தைந்து வயசுப் பிள்ளைக்கு இப்படிப் பொறுமை இருக்கிறதா?

"அருமையான பிள்ளைதான்"

எங்கள் பூனையின் பிரியம் அவளுக்குள் இருப்பதை நான் கண்டு கொண்டேன்.

எழுபது வயசு நிறையும் என் மனைவி பவளத்துக்கும் எனக்கும் கூட இவ்வளவு பொறுமையில்லை. ஒருவரின் கதையை மற்றவர் பொறுமையாகக் கேட்கும் மனநிலை எப்போதோ எங்களை விட்டுச் சென்று விட்டது. எங்களைச் சுற்றிவர கோபமும்

இயலாமை தந்த வார்த்தையின் சூடுகளுமே பெருகியிருந்தன.

பருத்தித்துறை செல்வதற்குத் தயாராக நின்ற பஸ்ஸில் என்னை மிகப் பக்குவமாக ஏற்றி, வசதியான ஒரு சீற்றில் அமர்த்தினாள்.

“மாமா பிரச்சினையில்லைத்தானே... நான் போகட்டோ... இல்லாட்டி பஸ் வெளிக்கிடு மட்டும் நிக்கவோ...?”

அவள் எனது பையை எனது காலுக்கடியில் வைத்தவாறே கேட்டாள்.

“இல்லைப் பிள்ளை... நீ போட்டு வா... நான் பவளத்தைப் போய்ப் பாத்துட்டு உனக்குப் போன் பண்ணுறன்... என” சொல்லிய படி அவளைப் பார்த்து சிரிக்க முயன்றேன்; முடியவில்லை.

“சரி மாமா... அப்ப நான் வாறன்...” என்ற படி அவள் சென்று விட்டாள்.

மீண்டும் என்னைச் சுற்றி வெறுமை கவிழ்ந்து கொட்டுண்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. அந்த வெறுமைக்குள் எங்கள் பூனை என்னைப் பார்த்தவாறு படுத்திருப்பது போன்ற பிரமை உருவானது.

> “வீட்டில நானும் பவளமும் மட்டுந்தான். எங்களுக்கு ஒரேயொரு ஆம்பிளப் பிள்ளை. காணியை வித்து ஒரு மாதிரி அவனை வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டம். அவன் இப்ப மனிசி பிள்ளையோட சந்தோசமா இருப்பான். அவனுக்கு எங்களப் பற்றின நினைப்புகள் கொஞ்சம் குறைவுதான். பவளம், பக்கத்து வீட்டுச் சந்திராவைப் பிடிச்சு போன் எடுத்து அழுது அரற்றினா வருசத்தில பத்தாயிரமோ இருபதாயிரமோ அனுப்புவான்...
>
> அவ்வளவு தான். அவன போனில பிடிக் கிறதே பெருங் காரியம்... அவர் வெளிய போட்டார்... வந்தாப்பிறகு எடுங்கோ எண்டு மருமகள் வைத்து

விடுவாள். பேரப்பிள்ளையின்ர குரல் எப்பிடியிருக்கும் எண்டு அறியிற ஆசை இன்னும் எங்களுக்குக் கைகூடவில்லை. அது அப்பம்மா அப்பப்பா எண்டு கூப்பிடுற விதம் எப்பிடியும் அழகாத் தானிருக்கும்"

இதுகளைப்பற்றி நினைத்து மருகிறதுதான் என்னுடைய வேலை. வேறு என்ன செய்வதற்கு இருக்கிறது.

பவளம் எங்கள் பூனைக்கு "பிரசாந்த்" எனப் பெயர் வைத்திருக்கிறாள். அதை அடிக்கடி கொஞ்சிக் கொள்வாள். அவளுக்கு காது கேட்பது குறைவு.

அவள் பூனையைக் கொஞ்சுவது நான்கு வீடுகளுக்கு எப்படியும் கேட்கும். அந்தப்பூனை வீட்டுக்குள் ராஜநடை நடந்து திரியும். எங்களுக்குள்ளேயே தூங்கியும் விடும்.

பஸ் குலுக்கலுடன் ஏதோவொரு இடத்தில் நின்றது. மெதுவாகத் தலையுயர்த்தி வெளியே பார்த்தேன். விடிகாலையின் பரபரப்பு வீதியில் தெரிந்தது. மெதுவாக சீற்றில் தலையைச் சாய்த்து கண்களை மூடிக்கொண்டேன். மனம் படபடப்பது நன்றாகவே தெரிகிறது. உள்ளுக்குள் ஒருவித பயம் தனது கைகளால் என்னை அளைந்து கொண்டேயிருக்கிறது.

பவளத்தோடு கோபித்துக் கொண்டுதான் வவுனியாவிற்கு வெளிக்கிட்டிருந்தேன். உண்மையில் நான் இப்படி வெளிக் கிட்டிருக்கக் கூடாது.

"என்ன செய்ய... இவ்வளவு வயசேறி சாகிற காலம் வந்தாப்பிறகும் "தான்" எண்டுற அகங்காரம் எனக்குள்ள இருந்து என்னை ஆட்டுவிக்குது"

ஆனால் என்னதான் கோபமென்றாலும் நானும் பவளமும் பூனையைச் சினந்ததே இல்லை.

"ம்... நான் நிண்டிருந்தா இப்பிடி நடந்திருக்காது... ஏதோ அக்ஸிடெண்டாம்... பவளம் ஆஸ்பத்திரியில எண்டு போன் வந்துது... கடவுளே"

என் மனம் இந்த நினைவுகளில் சிக்குபட்டு அல்லாடிக் கொண்டிருந்தது. தலையை ஏதோ இறுக்கிப்பிடிப்பது போன்ற உணர்வு எனக்குள் பரவியது. இடது கையால் எனது நெஞ்சை மெதுவாக அழுத்தி நீவி விட்டுக் கொண்டேன். பூனை என் மடிமீது ஏறி தனது வாலால் என் நெஞ்சைத் தடவும் அந்த ஞாபகப் பரிவு இப்போது எனக்குள் ஏற்பட்டது.

நெல்லியடி வந்துவிட்டதாக கொண்டக்டர் வந்து என்னிடம் சொன்னான்.

"மருமகள் பெட்டை அவனிட்ட சொல்லி வச்சிருப்பாள் போல... மறக்காமல் ஞாபகம் வச்சிருக்கிறான்..."

கண்களைத்திறந்து அவனது முகத்தை ஏறிட்டேன். இலேசான சிரிப்பு இழையோடிய களையான முகம்.

"சின்னப் பெடியன்தான்... நல்ல பெடியன்... ம்"

எனப் பெருமூச்சுவிட்டபடி நெல்லியடி பஸ் ஸ்ராண்டில் இறங்கிக் கொண்டேன். என்னைக் கூட்டிச் செல்வதற்கு யார் வந்திருக்கப் போகிறார்கள்.

"இந்த ரண்டு கட்டையளுக்கும் என்ன பிடிப்பு இருக்குது... ஒண்ட மற்றதைத் தாங்கினாத்தான் உண்டு..."

எனக்கு என்மீது கோபம் கோபமாக வந்தது. முட்டாள் தனமான காரியம் செய்திருக்கிறேன்.

"ச்சே... கோபம் வந்தா... வழமை மாதிரி நாலைஞ்சு பேச்சுப் பேசியிருக்கலாம்... இப்பிடி வெளிக்கிட்டிருக்கக் கூடாது... மடையன்"

வாய்விட்டு என்னைத் திட்டிக் கொண்டேன்.

அந்தப் பூனைதான் பவளத்தின் கவலைகளை மாற்றும் மந்திரமாக இருந்து வந்தது. அது பவளத்தோடுதான் இருந் திருக்கும்.

ஆஸ்பத்திரிக்கு முதல் போவதா அல்லது வீட்டுக்குப் போவதா என்பது எனக்கு விளங்கவில்லை.

"முதல்ல பவளத்தத்தான் பாக்கோணும்... என்ன கஷ்ரப் பட்டிருப்பாளோ தெரியாது... பாவம் தனிய என்ன செய்வாள்..."

மந்திகைக்கு போவதென்றால் வந்த பஸ்ஸிலேயே போயிருக்கலாம்.

"சரியான முட்டாள் தான்"

சொல்லிய படியே வந்து நின்ற மினிபஸ்ஸில் ஏறிக் கொண்டேன். மந்திகைச் சந்தியில் இறங்கி ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தேன். ஆஸ்பத்திரி வாசலில் ராசன் நிற்பது தெரிந்தது.

"என்ன குணமண்ணை... இப்பவே வாறியள்" சொன்னபடி ஓடிவந்தான் ராசன்.

"என்ன மாதிரியடா ராசன்..." தழுதழுக்க முயன்ற குரலை இழுத்துப் பிடித்துக் கொண்டேன்.

"இதில நில்லுங்கோ வாறன்"

கேட்டதற்குப் பதில் சொல்லாமல் விரைந்தான் ராசன். ஆஸ்பத்திரியையே வெறிக்கப் பார்த்தபடி நின்றேன். கால்கள் உளைந்தன.

"குணமண்ணை ஏறுங்கோ போவம்"

ஆனந்தன் ஆட்டோவைக் கொண்டு வந்து அருகில் நிறுத்தியிருந்தான். ராசன் தான் அவனை அனுப்பியிருந்தான்.

"ஏனப்பன் எங்க போக..." நான் விளங்காமல் அவனைப் பார்த்து கேட்டேன்.

"ஏறுங்கோவன் சொல்லுறன்" என்றபடி என்னுடைய பையைத் தூக்கி வைத்தான். நான் யோசிக்க முடியாமல் ஆட்டோவுக்குள் ஏறியமர்ந்தேன்.

"அப்பன் என்ன நடந்தது"

மௌனமாக ஆட்டோவைச் செலுத்திக் கொண்டிருந்த ஆனந்தனை பார்த்துக் கேட்டேன்.

"நீங்கள் போனப்பிறகு உங்கட பூனைக்கு ஏதோ காலில

காயம் எண்டு... அதைத் தூக்கிக்கொண்டு வைத்தியம் பாக்க நெல்லியடிக்குப் போயிருக்கிறா... றோட்டைக் கடக்கேக்க டிப்பர் அடிச்சுப் போட்டுதாம்"

"பாவி அவளுக்குக் காதும் கேட்காது" என்று முணு முணுத்தபடி கண்களில் நீர் கசிய ஆட்டோவின் சீற்றில் சாய்ந்து கொண்டேன்.

"...அப்ப... இப்ப எங்க போறாய்?"

"வீட்டுக்கு" என்று இழுத்தபடி சொன்னான் ஆனந்தன். பதட்டத்துடன் நிமிர்ந்து "என்ன?" என்றேன்.

"...அண்ணை... பவளமக்கா... போய்ச் சேந்துட்டா..." என்று தயங்கித் தயங்கிக் கூறினான்.

"இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னால தான் வீட்டுக்கு கொண்டு போனனாங்கள்..." சொல்லியபடி ஆட்டோவை விரைவு படுத்தினான்.

எனக்கு உடல் விறைத்து விட்டது போன்றிருந்தது. உதடு களைத் திறக்க முடியவில்லை. இரண்டு சொட்டு நீர் மட்டும் வழிந்து கண்களும் உறைந்து விட்டன. என்னைப்பற்றிய உணர்வின்றி ஆட்டோ ஓடிக்கொண்டிருந்தது. வீதியிலும் எல்லோரும் விரைந்து கொண்டிருந்தார்கள். நான் ஆனந்தன் சொன்ன வார்த்தை களுக்குள் சுழன்று கொண்டிருந்தேன்.

அந்தப் பூனையின் விரிந்த இரண்டு விழிகளும் என்னைக் குத்திட்டுப் பார்ப்பதான பிரமை எனக்குள் இறங்கியிருந்தது.

- 2013

# வெளிக்கிட்டிட்டன்

இந்த வீட்ட விட்டுட்டுப் போறதுக்கு எனக்கு எப்பவும் மனசு இடங்கொடுத்த தில்லை. இதை வெறுங்கல்லு மண் கொண்டு கட்டின வீடெண்டு மட்டும் சொல்லேலுமே... என்ர உழைப்பு...

மனுசியின்ர உயிர் மூச்சு...

குஞ்சுகுருமானுகளின்ர சிரிப்புச் சத்தம்... எல்லாந்தான்...

எனக்கேதோ கொஞ்ச நாளாய் செத்துப் போன என்ர மனிசி ராசாத்தியின்ர நினைப்புத் தான்

அவளிருந்தால்...

அதுக்குமேல நினைக்கேலாமல் வெறும் முகட்டையே பார்த்துக் கொண்டிருந்தன்.

என்னில பெலன் குறைச்சாப் பிறகு வெளியில இருக்கிற கொட்டில்ல விடத்தான் மூத்தவளுக்கு விருப்பம். நாலைஞ்சு நாகரிக மான சனம் வந்து போற இடமெண்டு அவளுக்கு நினைப்பு. நான் இந்த விசயத்தில பிடிவாதமா நிண்டுட்டன். பெரிய அறைக்குப்

பக்கத்தில நான் போட்ட ஒத்தாப்பில தான் என்ர கட்டிலை போட வேணும்.

பேரப்பிள்ளையளோட எண்டாலும் கதைக்கலாமெண்டா அதுகள் கிட்டவே வருகுதுகளில்ல.

"அப்புவுக்கு பக்கத்தில போகேலாமக் கிடக்கு... ஒரு கெட்ட நாத்தம் வீசுது" எண்டு மூத்த பேரப்பெட்டை தாயோட சிணுங்குவாள். கடைக்குட்டியை இழுத்து வச்சு கொஞ்சினா,

"அப்புவுக்கு வருத்தமல்லோ தொந்தரவு செய்யாதை... உனக்கும் வருத்தம் வந்திடும் எண்டு நிக்கிற ஆரோவொண்டு தூக்கிக் கொண்டு போடும்.

அதுகளுக்கும் எங்கே நேரம் கிடைக்கிது?

பள்ளிக்கூடம், ரியூசன், அது இதெண்டு ஓடித்திரிய பொழுது சரியாப்போச்சு. இந்தக் கிழவனைத் திரும்பிப் பாக்க அதுகளுக்கு எங்கை நேரம்?

நான் வந்துபோற வெய்யிலையும், சுத்தித்திரியிற காத்தையும் புதினம் பார்த்துக் கொண்டேயிருப்பன். வெயிலும் காத்தும் என்ர கண்ணுக்கு பழைய சங்கதிகள் பலதையும் கொண்டு வந்து முன்னால நிப்பாட்டும்.

என்ர சம்பவங்களைப் பாத்து அதுகளுக்குப் பின்னால் என்ர மனசை ஓட விட்டுப் பாத்திருப்பன். என்ர மனிசியோடை என்ர பாட்டுக்குக் கதைச்சுக் கொண்டிருப்பன்; அழுது கொண்டிருப்பன். மூத்தவள் அழுதுகுழறி எல்லாரையும் கூப்பிட்டுப் போட்டாள்.

"ஐயா அசையாமல் கண்டபாட்டுக்குப் பினாத்திரா... தட்டி அருட்டினாலும் அசையிறாவில்லை...

எனக்குப் பயமாக்கிடக்கு...

நெருங்கியிட்டுது போல கிடக்கு... அதுவரைக்கு மெண்டாலும் எல்லாரும் கூட இருங்கோவன்..."

அவளின்ர பயத்துக்காக எல்லாரும் அஞ்சு நாள் காத்திருந்து களைச்சுப் போய்... திரும்பிப் போட்டுதுகள்...

எனக்குத் தெரியும்... நான் இந்த வீட்ட விட்டுப் போறதுக்கான காலம் இன்னும் வரேல்ல எண்டு தான் நினைக்கிறன். எனக்கு வீட்டை விட்டு வெளிக்கிடுறதுக்கு கொஞ்சமெண்டாலும் விருப்ப மில்லை.

ஆனா இப்ப மூண்டு வருஷமா ஒரே கிடையில கிடந்து கொஞ்சம் அலுத்துத்தான் போட்டது... பாக்கிறதுகளுக்கும் அலுத்துப் போயிருக்கும்.

"ம்... என்ன செய்யிறது...

நல்ல இருட்டு, நித்திரை வரேல்ல. முழிச்சுப் பாத்துக் கொண்டேயிருந்தன்.

ஆரோ கூப்பிடுற மாதிரியிருந்தது; எனக்குப் பழக்கமான குரல்தான்.

மெதுவாக எழும்பினன், பக்கத்தில கைக்கொட்டன் இருந்துது. ஆனா எடுக்கேல்ல, நிண்டன்... தலை சுத்துற மாதிரி இருந்தது.

வரச்சொல்லி அந்தக் குரல் இப்பவும் கூப்பிடுது... சரியாப் பிடிபடேல்ல ஆரெண்டு.

என்னால நிமிந்து நிக்கேலாது...

மெதுவாக நடக்கத் தொடங்கினன்; முன்னால யாரோ போற அசுமாத்தம் தெரிஞ்சுது... அதைப் பிடிச்சுக் கொண்டு அப்பிடியே நடந்தன். எங்கை போனன், எப்படிப்போனன், எண்டு எனக்கே தெரியேல்ல.

படலையைத் திறந்து கொண்டு மண்டான் பக்கத்தால இறங்கி விதானையாற்ற தென்னங்காணிய கடந்து குடுகுடு வெண்டு நடந்து போறது எனக்கே தெரியுது.

இதாற்ற வீடு...? பிடிபடேல்ல.

தட்டி சாத்தியிருந்துது.

தட்டியைத் தள்ளிக் கொண்டு போனன்... அப்பிடியே கவிண்டு தட்டிக்கு மேல விழுந்து போனன்.

முழங்காலளவுக்கு முள்ளுக்கம்பி குறுக்காயிருந்து கீறியும் போட்டுது. மாடு கத்துற சத்தத்துக்கு லாம்பு வெளிச்சமொண்டு வீட்டுக் குள்ளால வெளிக்கிட்டு வந்துது.

“ஆரது…”

நான் குந்தியபடியிருந்தன்.

லாம்பை முகத்துக்குக் கிட்ட பிடிச்சபடி

“அட… சீனியப்புவே… என்ன நித்திரையில வெளிக்கிட்டியளே”

என்னால வாய் திறந்து பேச முடியேல்ல, முழிச்சபடி குந்தியிருந்தன்.

விடியக்காலம முழிக்கேக்குள்ள மூத்தவளின்ர குரல் கேட்டுது ஆரோடையோ கதைச்சுக்கொண்டிருக்கிறாள்.

“ எங்கட ஐயாவ ராத்திரி ஏதோ வந்து கையைப் பிடிச்சுக் கொண்டெல்லே போட்டுது”

“ம்… விசயம் கேள்விப்பட்டு பக்கத்தில இருக்கிறதுகள் பாக்க வந்திருக்குதுகள்.

“பிள்ளை… இப்படியான நேரத்திலதான் பேய் பிசாசுகள் வந்து இவையளைக் கூட்டிக் கொண்டு போறதெண்டு சொல்லு றவை… கவனமாப் பார்க்க வேணும்…”

வந்த ஆரோவொண்டு தனக்குத் தெரிஞ்ச கதையை சொல்லத் தொடங்கீட்டுது.

“கதையைக் கேளுங்கோ… பிறகு ஈசனெல்லோ தங்கட வீட்டுக்குப் பின்னால ஐயா விழுந்து கிடக்கிறதைப் பாத்துப்போட்டு தூக்கிக் கொண்டு வந்து விட்டு விட்டவன்.

நான் ஏதோ புதினங் கேக்கிற மாதிரியே கேட்டுக் கொண்டு படுத்திருக்கிறன் வயிறு நல்லாய்ப் பசிக்குது.

பக்கத்தில கஞ்சி வச்சிட்டுப் போயிருக்கிறாள். ஆனா எனக்குக் கஞ்சி கொஞ்ச நாளாய்ப் பிடிக்காமல் போட்டுது.

“பிள்ளை என்னெண்டு இந்த மனுசன் இருட்டுக்குள்ள குடு குடெண்டு போச்சுது… குளங்கள் குட்டைகள் இருக்கிற இடம்…”

இன்னொண்டு நல்லாக் கரிசனைபட்டுது.

“நாளைக்கு ஐயாவை நல்லாய்ப் பாக்கேல்ல எண்டு கதைவரும். தம்பியாக்கள் சொல்லுவாங்கள், இவள்தான் சாக விட்டுட்டாள் எண்டு”

மூத்தவளுக்கு அவளின்ர கவலை.

உதுகளைக் கேட்கப் பிடிக்காமல் அப்பிடியே கண்ணை மூடினன். தூங்கிப் போனன்.

இடியன் சத்தத்துக்கு கொக்குகள் பறக்கேக்குள்ள மனம் படக்கெண்டு அடிக்கும். அப்படித்தான் இப்ப அடிக்குது.

முந்தி மண்டான் காட்டுக்கு கொக்கு வேட்டைக்குப் போறனான். தனியவும் போவன்... அவன் சின்னாம்பியோடையும் போவன்.

கொக்கு வேட்டைக்குப் போகோணும் போலவே கிடக்கு.

மண்டானுக்குள்ள, முழங்காலளவு தண்ணிக்குள்ள, கொக்கைக் கலைக்காமல் மெதுவா நடந்து கண்டல் வேருகளின்ர இடைவெளிக்குள்ள மறைஞ்சிருப்பன்.

கொக்குகளில்லாட்டி கொக்குகள் வருமட்டும் காத்திருப்பன்; கையில வெடிமருந்து அடைச்ச இடியன் எப்பவும் துணைக்கிருக்கும்.

வெத்திலையப் போட்டுக் காத்திருந்தா, கொக்குகள் கூட்டமா வந்து அங்காலயிருக்கிற பொற்பத்தையில இருக்குங்கள். மனம் சிலிர்த்திச்சுது...

மூச்சு விடக்கூடாது...

கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருக்க வேணும்... மூச்ச நல்லா இழுத்து...

உடம்ப ஒருக்கா துடிச்சிச்சுது. மெதுவா அமத்த... வெடிச் சத்தத்தில் காற்று அதிர்ந்திச்சிது. என்ர உடம்பு பேந்து மொருக்கா துடிச்சிச்சுது.

கொக்குகள் எல்லாம் பறந்து போகுது

"ஐயோ ... என்ர ஐயா"

மூத்தவளின்ர அலறல் எங்கயோ தூரத்தில கேக்குது.

"ஐயோ எங்களை விட்டுப் போட்டியளே"அவளின் அலறல் இன்னும் நல்ல தூரமாய்க் கேக்க என்ர உடம்பு ஒருக்கா தூக்கிப் போட்டுது.

இந்தா, நான் வீட்டைவிட்டு வெளிக்கிட்டிட்டன்.

- சுடர்ஒளி - 2011



எழு
வெளியீட்டகம்

9 789553 932006

Rs:200.00